# கதைச்சாரல்



அகணி சுரேஸ்

# கதைச்சாரல்

## அகணி சுரேஸ்

# நூல் விபரம்

நூல்: கதைச்சாரல்

ஆசிரியர்: அகணி (சி.அ.சுரேஸ்)

தட்டச்சு, வடிவமைப்பு : சி.அ.சுரேஸ்

முதற் பதிப்பு: ஏப்ரல் 2020

உரிமை பதிவு: ஆசிரியர்

அச்சகம் : “சாமந்தி பதிப்பகம்”, மல்ரிசிமாட் சொலியூசன், ஒன்ரோரியா, கனடா

## Bibliography

Title: Kathaichcharal

Author: Akani Suresh(S.A.Suresh)

Typing, Type Setting : S.A.Suresh

First edition: April 2020

Printers: MultiSmart Solution, Ontario, Canada

Copyright: The Autho

ISBN: 978-0-9869016-8-3

9 780986 901683

## சமர்ப்பணம்

**இந்த நூலை ஈழப்போரில் உயிர்நீத்த போராளிகளுக்கும், போரிலும் இனக்கலவரங்களாலும் உயிர்நீத்த அப்பாவி மக்களுக்கும், உலகெங்கும் நடந்த போர்களினாலும், இயற்கை அழிவுகளாலும், கொடிய நோய்களினாலும், தற்கொலையாலும் மரணமடைந்த அனைவருக்கும் சமர்ப்பணம் செய்கின்றேன்.**

-நூலாசிரியர் அகணி சுரேஸ்

# அந்தப் பதினேழு நாட்கள்

அதிகாலை 4:30 மணி.

“ரிங்ங்ங்ங்ங்ங்ங்” ஒலி எழுப்பிய அலாரத்தை நிற்பாட்டி விட்டுப் படுக்கையை விட்டு முகம் கழுவச் சென்றான் சுகந்தன். அந்தக் குரோசரிக் கடையில் மற்ற அறைகளில் படுத்திருப்பவர்களின் நித்திரை குழம்பக்கூடாது என்பதற்காகப் பூனை ஒன்று பதுங்கிப் பதுங்கிச் செல்வது போல் மிகவும் கவனமாகவே நடந்து சென்றான். ஆனால் மரப்பலகையால் போடப்பட்ட நிலத்தளம் என்பதால் மத்தளம் எழுப்பும் “தொம் தொம்” போன்ற சத்தம் அவன் நடக்கும்போது ஏற்படத்தான் செய்தது.

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மூன்றாம் ஆண்டு மாணவனாகிய சுகந்தனுக்கு விடுமுறை காலம். உண்மையில் இரண்டு மூன்று தினங்கட்கு முன்பே வீடு செல்ல யாழ்ப்பாணத்தை நோக்கி ரெயிலில் ஏறியிருக்க வேண்டும். அவனின் பல்கலைக்கழக நண்பர்கள் எல்லோரும் வீட்டுக்குச் சென்று விட்டார்கள்.

ஆனால் சுகந்தனுக்கு வீடு செல்ல நாட்டமில்லை. அதற்கான காரணம் அவனின் மன வைராக்கியம் தான். “சிலதைச் சாதித்து விட்டுத்தான் நான் இனி வீட்டுப்பக்கம் போகணும்” என்ற வெறி அவன் மனதில் குடி கொண்டிருந்தது. கடந்த இரண்டு வருடமாக இந்த

விடயத்தில் இறுகிய மனத்துடன் விரதம் இருக்கின்றான் என்றுதான் கூற வேண்டும்.

அதற்கு வசதியாக சுகந்தனின் சிறு பராய நண்பன் சிவா குடும்பத்தினருக்கு கண்டியில் ஒரு குரோசரிக்கடை இருந்தது. விடுமுறை காலங்களில் சுகந்தன் அந்தக் கடையின் மேல் தளத்தில் உள்ள அறைகளில் தங்குவது வழக்கம். இம்முறையும், சுகந்தன் தனது பொருட்களுடன் வந்து அங்கு தங்கியிருந்தான். “மைச்சான் சுகந்தன் விடுமுறைக்கு வா, இங்கே தங்கலாம்” என்று கூப்பிட்டுத் தங்க வைப்பதில் சிவாவுக்கும் சந்தோஷம்.

சிவாவின் சிறு வயது நட்பு தொடர்ந்து நீடிப்பது சுகந்தனுக்கும் பிடித்தது. சுகந்தனைப் பொறுத்த வரையில் நட்பு மிகவும் உசத்தியானது. பல்கலைக்கழகச் சூழலில் உன்னத நட்பைக் காணுவது அரிது என்பது அவன் எண்ணம். சிலரிடம் சுயநலப் போக்கான நட்பைக் கண்டு அவன் எரிச்சல் அடைவதும் உண்டு.

அவசரம் அவசரமாக குளியலையும் முடித்துக் கொண்டு புறப்படத் தயாரானான் சுகந்தன். நேரம் காலை 5:15 மணி ஆகி விட்டது. ஆழ்ந்த நித்திரையில் இருந்த சிவாவை உரிமையுடன் மெல்லத் தட்டி எழுப்பினான். “நான் போய் விட்டு வாரேன். கதவைப் பூட்ட நீதான் வரவேணும்” என்று சுகந்தன் கூறினான். நிலைமையைப் புரிந்து கொண்ட சிவா அரைத் தூக்கத்தோடு கீழே படியிறங்கி வந்து கதவைத்

திறந்து சுகந்தனை வழியனுப்பி வைத்து விட்டு, கதவைப் பூட்டிக் கொண்டு திரும்பவும் போய்ப் படுத்து விட்டான்.

கண்டி வீதியில் விசாலமாகத் தோற்றமளித்த அந்தக் கடையிலிருந்து வெளியேறி விறு விறென்று நடந்து கொழும்பிற்குச் செல்லும் பிரத்தியேக பஸ்கள் வெளிக்கிடும் தரிப்பை நோக்கி நடந்தான் சுகந்தன்.

கொழும்பை நோக்கிச் செல்வதற்காக ஒரு பஸ் தயராக நின்றது. புத்தம் புதியதாகக் காட்சியளித்த அந்த பஸ்ஸின் கிளினர் “கொலம்பு கொட்டுவ, கொலம்பு கொட்டுவ”(கொழும்பு கோட்டை, கொழும்பு கோட்டை) என்று கூவி ஆள் சேர்த்துக் கொண்டிருந்தான். கொழும்புக்குப் போய் அன்று இரவுக்குள் திரும்பி வருவதுதான் சுகந்தனின் திட்டம். அதனால் அவனுக்கு அதிகமாக எதையும் கொண்டு போகவேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஆனாலும் அவன் தோளில் ஒரு நீல நிறத் துணிப்பை இருந்தது. அதற்குள் ஒரு அரைக்குடை, கணினிப் புத்தகம் இவற்றுடன் ஒரு பிளாஸ்ரிக் போத்தலில் தண்ணீர் என்பவை இருந்தன. பஸ் ஸ்ரொப்க்கு அருகில் இருந்த பெட்டிக் கடையில் ஒரு “மலிபன் லெமன் பவ் பிஸ்கட் பக்கற்” வாங்கித் தன் பையில் போட்டுக்கொண்டான். இரண்டு அல்லது மூன்று பிஸ்கட் கடித்து கொஞ்சம் தண்ணீரும் குடித்தால் அவனின் காலைச்சாப்பாடு முடிந்து விடும்.

பஸ்ஸில் ஏறிய சுகந்தன் யன்னல் பக்கச் சீற்றில் அமர்ந்து கொண்டான். மேலும் பலர் ஒவ்வொருவராக வந்து ஏறிக் கொண்டார்கள். பஸ்ஸில் உள்ள இருக்கைகள் நிறைந்து விட்டன.

காலை 5:40 மணிக்கெல்லாம் பஸ் கிளம்பி கொழும்பு நோக்கிப் பயணித்தது. கிளினர் பின் வரிசையில் இருந்து தன் வசூலைச் செய்து கொண்டு வந்தான்.

வேலை நாள் என்பதால் குடும்பத்துடன் பயணிப்பவர்கள் குறைவாக இருந்தது. அவரவர் தத்தமது வேலை அலுவல் காரணமாகத் தனியாகக் கொழும்பு செல்பவர்களாகத் தான் காணப்பட்டார்கள். காலை நேரமும் என்பதால் பஸ்ஸில் அமைதி நிலவியது. கிளினரின் குரல் மட்டும் இடைக்கிடை கேட்டுக் கொணடிருந்தது.

காலை நேரம். வாகன நெரிசல் தெருக்களில் இல்லை. சில நிமிடங்களில் பஸ் பேராதனைச் சந்தியைக் கடந்து கொழும்பு நோக்கிச் சென்றது. பஸ்ஸில் இருந்தவர்களில் பலரும் கண்ணை மூடியவாறு குட்டித்தூக்கம் போட்டுக் கொண்டிருந்தார்கள். சுகந்தனால் நித்திரை கொள்ள முடியவில்லை. அவன் மனதில் பல விடயங்கள் அலை மோதிக் கொண்டிருந்தன. “எப்போதுதான் என் படிப்பு முடியும். எவ்வாறு எனக்குள்ள பொறுப்புக்களை நிறைவேற்றப் போகின்றேன்” என்றெல்லாம் பல கேள்விகள் அவன் மனதை ஆட்டிப் படைத்தன. அவன் குடும்பத்தின்

பொருளாதார நிலைமை அவன் மனதை அவ்வப்போது துயருற வைக்கும் முக்கிய காரணி.

கண்டி கொழும்பு வீதியென்றால் வீதியில் ஏற்றம், இறக்கம் இருக்கும். சுழிவு வளைவுகள் சுமாராக இருக்கும். அதனால் பஸ் கொடுக்கும் அசைவுகளுக்கும், குலுக்கல்களுக்கும் இசைவு கொடுத்தவாறு அவன் பயணம் தொடர்ந்தது.

அந்த மினி பஸ் களனிப்பாலத்தையும் தாண்டி கொழும்பு மாநகர எல்லைக்குள் வந்தது. தூக்கம் போட்டவர்கள் எல்லாம் கண் முழித்து இறங்குவதற்கு உசாராகிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாக கொழும்பு புகையிரத நிலையத்தை பஸ் வந்ததும் சுகந்தன் இறங்கிக் கொண்டான். அவன் போகவேண்டியது ஒரு சில யார் தூரத்தில் இருந்த கட்டிடத் திணைக்களத்திற்கே ஆகும். அடுத்த வருட விடுமுறை காலத்தில் வேலைசெய்வது பற்றியதாகத்தான் அவன் பிரயாண நோக்கம் இருந்தது.

ஒரு சில காலடிகளை எடுத்து வைத்தளவில் அங்கு நிலவிய குழப்பமான நிலை அவன் கண்ணில் பட்டது. ஆகாயத்தில் ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தது. ஏதோ தூரத்தில் தீப்பற்றி எரிகிறது என அந்தப் புகைமண்டலம் மூலம் ஊகிக்க முடிந்தது. அங்கும் இங்கும் சனங்கள் ஓடினார்கள். தெருவில் சென்ற தமிழர் சிலர் “கொழும்பில் கலவரம் எல்லாம் கொழுத்திறாங்க ஓடி ஒளியுங்கோ” என்று கூறிச்

சென்றதைக் கேட்டதும் தன் நிலைமை என்ன என்பதை சுகந்தன் உணர்ந்தான். “ஐயோ கடவுளே மீண்டும் கலவரமா! நான் எங்கே போவேன்” என மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

77ம் ஆண்டுக் கலவரத்தில் சுகந்தனின் அண்ணன் மயிரிழையில் உயிர்தப்பி வீடு வந்து சேர்ந்தது பற்றிய நினைவு அவன் மனதை விட்டு இன்னமும் நீங்கவில்லை. சுகந்தனுக்கு பயம் அதிகமானது. அந்தக் கலவரத்தில் நடந்தவை பற்றி நிறையவே செய்திகளாக வாசித்து அறிந்திருந்தான்.

சுகந்தன் கொழும்பிற்கு வரும்பொழுதில் அவன் தங்கும் உறவினர் வீடு வெள்ளவத்தையில் உள்ளது. பஸ் எடுத்து அங்கு போவோம் என நினைத்து பஸ் ஸ்ரொப்புக்கு ஓடினான். பஸ் ஓட்டமும் இல்லை என்பதை அறிந்தான். “என்ன செய்யலாம். ஓட்டோ எடுத்தாவது போகவேண்டியதுதான்” என நினைத்து ஓட்டோவை மறிக்கத் தொடங்கினான். அவர்களில் பலர் நிற்கவேயில்லை. சிலர் எங்கு போக வேண்டும் என்று அறிந்ததும் கையை விரித்தார்கள்.

ஏதோ கடவுள் செயலால் ஒரு ஓட்டோ நிற்கவே அதில் ஏறிக்கொண்டான். “மாத்தையா கொகேத யண்ட ஓன”(சார் எங்கே போகணும்) என ஓட்டோச் சாரதி கேட்க “மம வெள்ளவத்தை யண்டோன” (நான் வெள்ளவத்தை

போகணும்) எனப் பதிலளித்தான். “பாய் பாய் வெள்ளவத்தை தங் யண்ட பாய். எகே ஹரி அமாறு” (முடியாது முடியாது வெள்ளவத்தைக்கு இப்போது போக முடியாது) என்று சொன்னான் ஓட்டோச் சாரதி.

அப்பொழுது சுகந்தனுக்கு கொட்டாஞ்சேனையில் உள்ள சுப்பிரமணியம் அங்கிள் வீடுதான் நினைவுக்கு வந்தது. கொழும்பிற்கு வரும்போது விசிற் பண்ணியிருக்கிறான். ஒரு நாளும் அவர்கள் வீட்டில் தங்கியது கிடையாது. “அங்காவது போவம். இடமும் கிட்டத்தானே” என தனக்குள் நினைத்துக் கொண்டு “ஹரி ஹரி கருணாகர கொட்டகேனட்ட யண்ட புளுவாங்த” (சரி சரி தயவுசெய்து கொட்டாஞ்சேனைக்கு போக முடியுமா) என ஓட்டோச் சாரதியிடம் கேட்டான். சுகந்தன் பேராதனைக்கு படிக்க வந்த பிறகு அவனுக்கு கொஞ்சம் சிங்களம் சரியோ பிழையோ கதைக்கும் துணிவு இருந்தது. “ஹரி யமு “ (சரி போவம்) என்றவாறு கொழும்புத் துறைமுகப் பக்கம் நோக்கி ஓட்டோவைச் செலுத்தினான் சாரதி. பிற்ற கோட்டே பகுதியில் காடையர் கடைகளை சூறையாடியதையும், அங்குள்ள பொருட்களை பலர் தூக்கிக் கொண்டு ஓடுவதையும் பார்த்த படி ஒரு விதமான அச்சத்துடன் ஓட்டோவில் இருந்தான் சுகந்தன். இடையில் எதிரே வந்த ஓட்டோவை மறித்துப் பேசிய ஓட்டோச் சாரதி கொட்டாஞ்சேனைக்கும் அவ்வழியால் போக முடியாதென்பதை உணர்ந்து மருதானைப் பக்கம் நோக்கி ஓட்டோவைச் செலுத்தினான்.

சுகந்தனுக்கு மேலும் பதற்றமாக இருந்தது. “மாத்தையா ஹரி அமாறு மம கோமத்ஹரி கொட்டகேனட்ட யண்ட பலனுவா” (சார் சரியான கஷ்டம்) “கௌத ஹரி ஆவுத் ஒப கத்தாகரண்ட எப்பா” (யாரும் வந்தால் நீங்கள் கதைக்க வேண்டாம்) எனக் கூறியவாறு ஓட்டோவைச் செலுத்தினான். சுகந்தனும் பதிலுக்கு “ஹரி ஹரி” (சரி சரி) என்று கூறி தலையசைத்தான். “கடவுள் செயலால் ஒரு நல்ல ஓட்டோ சாரதி கிடைத்திருக்கின்றான்” என்று மனதிற்குள் எண்ணியவாறு இருந்தான் சுகந்தான். “முருகா முருகா” எனத் திரும்பத் திரும்பப் பிரார்த்தித்துக் கொண்டான்.

ஆனந்தாக் கல்லூரிப் பக்கமாகச் சென்ற போது பல இடங்களில் காடையர் ஓட்டோவை மறிக்கவும் “சிங்கள மாத்தையா எக்கனிக் அதிசயட்ட யண்ட ஓணலு” (சிங்கள சார் ஒருவர் அவசரமாக போக வேணுமாம்) என அவர்களுக்கு புத்திசாலித்தனமாகப் பதிலளித்து சுகந்தனைக் காப்பாற்றினான் சாரதி.

சுகந்தன் தெருவீதியெங்கும் பல கோரமான காட்சிகளையும் கண்ணுற்றான். கார்களைக் கொழுத்துகிறார்கள். இரத்தம் தோய்ந்த மீன் வெட்டும் கத்திகள், பொல்லுக்கள் சகிதம் தெரு வீதியில் நிற்கிறார்கள். வீதியில் போட்டுக் கதறக் கதற அடிக்கிறார்கள். சில தமிழர்கள் தப்பி ஓடுகிறார்கள்.

பல உடல்கள் தெருவில் கிடக்கின்றன. மனித உடலுறுப்புக்களும் சிதறிக் கிடந்தன. உடல்களை ரயர்கள் போட்டுக் கொழுத்துவதும் தெரிகிறது. மனித ஓலம் விண்ணைத் தொடுகிறது. ஒரே புகை மண்டலம். தீச் சுவாலை.... அப்பப்பா அவனுக்கு இப்படி ஒரு கொடுரத்தை கண்ணால் பார்க்கவே முடியவில்லை. சில வேளைகளில் கண்ணையும் மூடிக் கொண்டான்.

இதையெல்லாம் தாண்டி கொட்டாஞ்சேனையில் சுகந்தன் செல்ல விரும்பிய வீட்டு வாசலில் ஓட்டோ நின்றது. அந்தச் சாரதி சுகந்தனுக்கு ஒரு தெய்வமாக உயர்ந்து தென்பட்டான். “இப்படியும் ஒரு சிங்களவரா” என ஆச்சரியப்பட வைத்தது. சுகந்தன் சாரதியைப் பார்த்து “போமஸ்துதி” (மிக்க நன்றி) என்று கூறிக்கொண்டு காசையும் கொடுத்து விட்டு விடைபெற்றான். சாரதியின் முகம் “ஒரு உயிரை கொலைக்களத்தில் இருந்து காப்பாற்றி விட்டேன்” என்று நிம்மதியடைவதைக் காட்டிக்கொண்டது. உண்மைதான் அந்த உத்தம சாரதி சுகந்தனைக் காப்பாற்றியிருக்கா விட்டால் அவன் அன்று கடாப்பலியாக்கப் பட்டிருப்பான். அவன் உயிர் போயிருக்கும்’.

கொழும்பெங்கும் பரவியிருந்த கொடூரமான கலவரத்தில் இருந்து தப்பிக் கொள்ளும் கடைசி முயற்சியாக சுப்பிரமணியம் அங்கிள் வீட்டுக்குள் காலடி வைத்தான் சுகந்தன். வீட்டுக்குள் நுழைந்த சுகந்தனால் ஹோலில் யாரையும் காணமுடியாததால் குசினிப்பக்கமாக

எட்டிப்பார்த்தான். இவனின் காலடிச் சத்தம் கேட்டதும் ஆமை தன் ஓட்டுக்குள் இருந்து தலையை வெளியே நீட்டுவது போல் யாரோ மெதுவாக எட்டிப் பார்த்ததும் “அங்கிள் நான் சுகந்தன் வந்திருக்கிறன்” எனக் குரல் கொடுத்தான். அவனின் குரலைக் கேட்ட சுப்பிரமணியம் அங்கிள் ஓடி வந்து “தம்பி சுகந்தன் எப்படி வந்தனீர்” என்று கேட்டபடி குசினிக்குள் ஒளியச் செய்தார். முழுக் குடும்பமும் குசினிக்குள் ஒளிந்திருப்பதை சுகந்தன் கண்டு நிலைமையைப் புரிந்து அவர்களுடன் தன்னையும் இணைத்துக் கொண்டான்.

எல்லோரும் அச்சத்துடன் காணப்பட்டனர். யாரும் எதுவும் பேசக்கூடிய நிலையில் இல்லை. இந்த நிலைமை ஒரு அரை மணி நேரம் நீடித்திருக்கும்.

ஹோலில் யாரே பேசும் சத்தம் கேட்டது. பொருட்கள் உடையும் சத்தமும் கேட்டது. “ஐயோ வந்திட்டாங்க கடவுளே” என எல்லோரும் பதறுவதைப் பார்த்த சுகந்தன் தானும் வாயில் “முருகா முருகா” என உச்சரித்துக் கொண்டான். தெருப்பக்கமாக சில சூட்டுச்சத்தங்கள் கேட்டன. பின்பு மயான அமைதி நிலவியது.

மெல்லமாக எட்டிப்பார்த்த சுப்பிரமணியம் அங்கிள் “பொலிஸ் வந்திருக்கு” என்று கூறிக்கொண்டு வெளியே வந்தார். பொந்துக்குள் இருந்து வரும் நண்டுக்கள் போல் ஒவ்வொருதராக எல்லோரும் வெளியே வந்தார்கள்.

வீட்டு வாசலில் ஒரு பொலீஸ் ஜீப் நின்றது. மூன்று பொலீஸ்களுடன் இன்ஸ்பெக்டர் காந்தனும் வந்திருப்பதாக அறிந்து கொண்டான் சுகந்தன். “உங்கடை நல்ல காலம் நாங்கள் வந்திட்டம். இல்லாவிடில் உங்கடை வீட்டை கொழுத்தியிருப்பாங்க. வீட்டிலை நிற்கவேண்டாம். உங்க உயிருக்கு ஆபத்து” என்று சொன்னார் இன்ஸ்பெக்டர். “கன வீடுகள் கொழுத்திட்டாங்க” என்று கூறியவாறு காடையர் வீடுகளைக் கொழுத்தக் கொண்டு வந்த பொருட்களைக் காட்டினார் இன்ஸ்பெக்டர்.

அதற்குப் பதிலளித்த சுப்பிரமணியம் “ நாங்கள் எங்கை போகிறதையா, எங்களை பொலிஸ் ஸ்ரேசனுக்குத் தான் கூட்டிச் செல்லுங்கள்” என்றார். “அங்கெல்லாம் கொண்டு போக நேரம் இல்லை வேணுமென்றால் கொச்சிக்கடைக் கோவிலில் இறக்கிறோம்” என்று கூறி எல்லோரையும் ஜிப்பில் ஏற்றினார்கள்.

வரும் வழியில் கூட சிங்கள காடையரின் அட்டகாசத்தை அவர்களால் பார்க்க முடிந்தது. கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசர் ஆலயத்தில் வந்த தஞ்சம் அடைந்த முதல் அகதிகளாக அவர்கள் இருந்தார்கள். அந்த ஆலயத்தின் அர்ச்சகரும் குடும்பத்தினரும் தம்மிடம் இருந்த உணவைப் பரிமாறி அவர்களை ஆதரித்தார்கள். நேரம் செல்லச் செல்ல இவர்களைப் போல் பலரும் கொண்டு வரப்பட்டனர். ஆலயம் சனத்தால் நிரம்பி வழிந்தது. சாப்பாட்டுக்கு வழியேதும் இருக்க வில்லை.

பல இடங்களிலும் நடந்த கொடூரச் சம்பவங்களைப் பற்றி பலரும் பேசிக் கொண்டார்கள். கொள்ளையடிக்கப்பட்ட பிஸ்கட் போன்றவற்றை சிலர் ஆலயத்தின் மதிலின் மேலால் விற்றார்கள். இதைக் காசு கொடுத்து வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டனர் சிலர்.

வெலிக்கடைச் சிறையில் தமிழ் சிறைக்கைதிகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டது பற்றியும் பேசிக்கொண்டனர்.

அடுத்த நாள் மாலையளவில் தான் கொஞ்சம் கொஞ்சமாக கொழும்பில் கலவரம் கட்டுப்படுத்தப்படுவதாக சிலர் பேசினர்.

77ம் ஆண்டுக் கலவரத்தை விட மோசமாம் என்றும் பலர் பேசியது சுகந்தன் காதில் விழுந்தது .மூன்று நாட்கள் ஓடி விட்டது. நாலாவது நாள் காலை அகதிகள் முகாம் திறந்துள்ளார்கள் எனப் பேச்சு அடிபட்டது. இராணுவ ரக்குகளில் ஏற்றி “சென்ற் பெனடிற் கொலிஜ்” அகதிமுகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர். இவ்வாறே சுகந்தனும் அந்த முகாமிற்குள் காலடி எடுத்து வைத்தான். பசி ஒரு புறம் வாட்டியது. இனி என்ன நிலைமை என்ற கவலையும் அவன் மனதைக் குடைந்தது. தமிழனாகப் பிறந்ததற்காக இவ்வளவு தண்டனையா எனச் சலித்துக் கொண்டான் சுகந்தன்.

அந்த முகாமுக்குள் காலடி எடுத்து வைத்து இரண்டு மணித்தியாலம் ஆவதற்குள் அந்த முகாமுள்ளும் காடையர் குண்டை வீசினர். எல்லோரும் கதறி ஓடினர். அதனால் அங்கு மேலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

சில தமிழ் முதலாளிகளும் அந்த முகாமில் இருந்தனர். அவர்களின் உதவியால் ஒரு நேர உணவைக் கொடுத்தார்கள். சுகந்தனுக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு கிடைத்த உணவு அதுதான்.

மலசல கூட வசதி பெரும் மோசமாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக வசதிகளும் அங்கு அதிகரிக்கப்பட்டன. சுகந்தன் அகதி முகாம் வாழ்க்கையில் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டான். கண்டியில் இருந்து கொண்டு வந்த துணிப்பையுடன் முகாமில் வழங்கப்பட்ட உணவுக் கோப்பைகள் போன்றவற்றைத் தனது சொத்தாகச் சேர்த்துக் கொண்டான்.

அங்கு உயிர் தப்பி வந்தவர்களின் கதைகளையும், கொடூரமாகக் பலர் கொலை செய்யப்பட்ட எண்ணற்ற கதைகளைக் கேட்டு மனம் வருந்தினான். சுகந்தனைப் போல் கண்டியில் இருந்து கொழும்புக்கு வந்த பல தமிழர்கள் கொலை செய்யப்பட்டமை பற்றியும் சுகந்தன் காதில் விழுந்தது. சுகந்தனின் கதையைக் கேட்டு அறிந்து கொண்ட சிலர் “நீ உயிர் தப்பியதே பெரிய விடயம்” என்று கூறினார்கள்.

நாட்கள் கடந்தன. கப்பல் மூலம் அகதி முகாமில் இருந்தவர்களை சொந்த இடத்திற்கு அனுப்பத் தொடங்கினார்கள். நோய் வாய்ப்பட்டவர்கள், குழந்தைகளுடன் இருப்பவர்கள் என முக்கியத்துவம் கொடுத்து அனுப்பினார்கள். அகதி முகாமில் இல்லாது சிங்கள நண்பர்களின் உதவியோடு வெளியில் இருந்த பலரும் தமது செல்வாக்கால் கப்பல் முன்னுரிமை பெற்றுச் செல்லத் தொடங்கினார்கள்.

எந்த முன்னுரிமையும் பெற முடியாதவனாக 14ம் நாள் சுகந்தனுக்கு சரக்குக் கப்பலில் யாழ்ப்பாணம் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அகதி முகாமில் கிடைத்த பிளாஸ்டிக் கோப்பை போன்ற பொருட்களை எடுத்துக் கொண்டு கப்பலில் ஏறினான் சுகந்தன். அந்தச் சரக்குக் கப்பலிலும் மேல் தட்டில் இருக்கத்தான் இடம் கிடைத்தது. அலை பெரிதாக வரும்போது உப்பு நீரால் குளிப்பாட்டி விட்டிடும். இவ்வாறாக அடிக்கடி நனைவதும், பின் ஈரத்தை துடைப்பதாகவும் தான் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது.

சாப்பாடு ஒழுங்காக கொடுத்தாலும், கப்பலில் உள்ள மலசல கூட வசதிகளைப் பார்த்து சாப்பிடாமலே சுகந்தன் பிரயாணம் செய்தான்.

மேலும் திருகோணமலைப் பக்கமாக வரும்போது நடுக்கடலில் கப்பல் பழுதாகி விட்டது. “பட்ட காலிலே படும்,

கெட்ட குடியே கெடும்" என்பது போல இருந்தது சுகந்தனின் நிலைமை. ஒரு நாள் பூராவும் கப்பல் நடுக்கடலில் நின்றது.

சுகந்தன் கண்டியில் இருந்து கொழும்பிற்கு புறப்பட்ட நாளிலிருந்து 17 வது நாளாகி விட்டது. காங்கேசன் துறைமுகத்தை கப்பல் பகல் நேரம் ஒருவாறு வந்தடைந்தது. ஏதோ ஒரு வேற்று நாட்டில் இருந்து அகதியாகி சொந்த நாட்டுக்கு வந்தது போன்ற நிலைதான் சுகந்தனுக்கு இருந்தது.

அங்கே தொண்டர்கள் நின்று உணவு வழங்கிச் சேவை புரிந்து கொண்டிருந்தார்கள். சுகந்தனின் பல்கலைக்கழக நண்பர்கள் சிலரும் தொண்டர்களாக நின்றனர். அவர்கள் சுகந்தனைக் கண்டதும் ஆச்சரியப்பட்டனர். அதன்பின் பஸ்ஸில் ஏறி சுகந்தன் தனது வீட்டுக்குச் சென்றான்.

அவனைக் காணும் வரையில் வீட்டாருக்கு அவன் பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லை. அவர்களுக்கு கிடைத்த தகவல் கலவரம் தொடங்கிய அந்தக் காலை சுகந்தன் கண்டியில் இருந்து கொழும்பு சென்றதாகவும், அவ்வாறு சென்ற பலர் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்பதும் தான். அதனால் வீட்டில் சுகந்தனின் நிலையை எண்ணி மிகவும் பயந்து கொண்டிருந்தார்கள். அந்தப் பதினேழு நாட்களும் சுகந்தனின் வீடு ஒரு மரண வீடாகத்தான் இருந்தது. ஏதோ ஒரு வழியில் தெய்வாதீனமாக

தப்பியிருக்கமாட்டானா என்ற ஒரு அங்கலாய்ப்புடன் இருந்தார்கள்.

சுகந்தனின் வருகை வீட்டில் எல்லோருக்கும் ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது. கண்கள் கலங்க எல்லோரும் சுகந்தனை கட்டித்தழுவிக் கொண்டனர். சுகந்தன் வீடு உயிர் தப்பி வந்துவிட்டாலும், எதையாவது சாதித்து விட்டுத்தான் வரவேண்டும் என்ற வைராக்கியத்தில் இருந்து தவறி விட்டேன் என்ற கவலை ஒரு புறம், இனி என்னதான் நடக்கப்போகிறது என்ற கவலை மறுபுறமாக வாட்டி வதைத்தது.

இடிமேல் இடியாக, கண்டியில் சுகந்தனின் நண்பனின் கடை எரிக்கப்பட்டு விட்டதாகவும், நண்பன் சிவாவும் யாழ்ப்பாணம் வந்து விட்டதாகவும் அறிந்தான். சுகந்தனின் அத்தனை பொருட்களும் எரிந்து விட்டன. முக்கியமாக அவன் சிறு வயது முதல் பல்கலைக்கழகம் வரை பெற்ற சான்றிதழ்கள், படங்கள் எல்லாம் எரிந்து விட்டதை எண்ணி மேலும் கவலைப்பட்டான். சுகந்தன் வாழ்வில் அந்தப் பதினேழு நாட்களில் எத்தனை சோதனைகள், இழப்புக்கள். சுகந்தனைப் போல் எத்தனையோ பேரின் வாழ்வில் நடந்த கொடூரங்கள், இழப்புக்கள் எத்தனை எத்தனை ......நன்றி :

- முன்பதிப்பு — நன்றி தமிழ் மிரர் பத்திரிகை, கனடா, சிறுகதைகள்.கொம்

# இழப்பு

“ம் ம் ம் ................ என்ரை பந்து தொலைந்து போட்டுது. அம்மா அம்மா அம்மா பந்து தொலைந்து போட்டுது. ம்ம்ம்..... எனக்கு பந்து வேணும் “ என்று அழுதவாறு சுகி அம்மா சாந்தியிடம் ஓடி வந்தாள். சுகியின் அழுகைச் சத்தம் கேட்டு அறையில் இளைப்பாறிக் கொண்டிருந்த ராம் அக்கா ஏன் சுகி அழுகிறான் எனக் கேட்ட வண்ணம் வெளியே வந்தான். சாந்தி சுகியைப் பார்த்து சிணுங்கல் சத்தத்தை நிற்பாட்ட சைகை காட்டியவாறு ராமுக்கு “சுகி பந்தை தொலைத்துப் போட்டாளாம், அதுதான் அழுகிறாள்” என்று பதில் கூறினாள். “அக்கா! சுகி பாவம், அவளுக்கு அந்த பந்தில் சரியான விருப்பம். அதுதான் அழுகிறாள்.. புது பந்து ஒன்று வேண்டி தருவதாக சொல்லுங்கோ” என ராம் சுகியை சாந்தப் படுத்த முயன்றான். “இல்லை தம்பி இப்படிதான் நாங்கள் வாங்கி வாங்கிக் கொடுக்க அவளுக்கு கவனமே இல்லை. அம்மா கூறியதைக் கேட்ட சுகியின் அழுகை மேலும் கூடியது. விம்மி விம்மி அழுதாள். “அது சரி அக்கா, பந்து விளையாடேக்கை தொலையிறதுக்கு அவள் பாவம் என்ன செய்வாள். “ என்ற ராமின் தீர்ப்பை கேட்ட சாந்தி “சரி அம்மா சுகி, மாமா சொல்லுற படியால் நான் புதுப் பந்து வாங்கித் தருவன்” எனச் சொல்லி சுகியின் அழுகையை நிற்பாட்டினாள். மேலும் “சுகி ஒரேஞ் யூஸ் தாறேன் குடியுங்கோ” எனச் சொல்லி சுகியைக் கூட்டிக் கொண்டு குசினிக்குள் போனாள் சாந்தி. சிறு நேரம் கழித்து “தம்பி ராம் நீங்களும் ஒரேஞ் யூஸ் குடியுங்களேன்” என ராமுக்கு கிட்ட வந்தவள், ராம் ஆடாமல் அசையாமல் நின்றதைக் கண்டு

அவனை உற்று நோக்கினாள். அவன் முகம் வாடி இருந்தது. "என்ன தம்பி யோசிக்கிறாய்" என ராமை வினவினாள். "ஒன்றுமில்லை அக்கா, குழந்தை பந்தையிழுந்து தவித்ததை பார்த்ததும் எனது இழப்பு ஞாபகத்துக்கு வந்து விட்டது. "என்ன தம்பி சொல்கிறாய்" கேட்டாள் சாந்தி. "சுகி இழுந்தது பந்து நாங்கள் வாங்கி விடலாம். நான் இழுந்ததை பெற்றுக் கொள்ள முடியாதே " என ராம் புலம்ப சாந்தி விடயத்தை புரிந்து கொண்டவளாக "ஏன் தம்பி இப்ப அதையெல்லாம் யோசிக்கிறாய்" என ராமினை சமாதானப் படுத்தி விட்டு அவசரமாக குசினிக்குள் சென்று தனக்குள்ளேயே அழுது கொண்டாள். அருகில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்ட ராமின் நினைவுத் திரையில் கடந்த கால நினைவுகள் மீளத் தொடங்கின.

பல வருடங்களுக்கு முன்பு, ராம் ஒரு கல்லூரி மாணவன். வேளாங்கண்ணி மகா வித்தியாலத்தில் 10ம் தரம் படித்துக் கொண்டிருந்தான். ராம் படிப்பில் மட்டும் இல்லாது பேச்சு, கட்டுரை போட்டிகளிலும் ஈடுபட்டு அவன் திறமை மகாவித்தியாலத்தில் ஓங்கி இருந்தது. வருடா வருடம் வரும் பரிசளிப்பு விளாவில் நிறைய பரிசுகளை பெற்றுக்கொள்வான். இந்த ஆண்டும் பரிசளிப்பு விழா நெருங்கிக் கொண்டிருந்தது. பரிசு பெறுவோர் பற்றிய விபர அறிக்கையில் தனக்கு பல பரிசுள் கிடைக்க இருப்பதை அறிந்து ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தான். ராம் தனது கல்வியில் காட்டும் அக்கறையைக் கண்டு மகிழ்ச்சி கொண்ட பெற்றோர்கள் வருடா வருடம் பரிசளிப்பு விழாவிற்கு முன்பு புது உடுப்பு வாங்கி தமது பரிசாக கொடுப்பார்கள். அந்த உடுப்பை அவன் பரிசளிப்பு விழாவிற்கு அணிந்து கொள்வான். அதே போன்று இந்த

வருடமும் அவனுக்குரிய புது உடுப்பு தயாராக இருந்தது. எப்போது பரசளிப்பு விழா வரும் என்ற ஆவலோடு நாட்களை எண்ணிக் கொண்டேயிருந்தான் ராம்.

புரிசளிப்பு நாள் வந்தது. பெற்றோருடன் அவர்கள் ஆசையோடு வாங்கித் தந்த புதிய ஆடைகளை அணிந்து கொண்டு போனான். பரிசு வழுங்கும் நிகழ்ச்சி ஆரம்பமாகி மாணவர்கள் வரிசை வரிசையாக சென்று பரிசுகளை வாங்கிக் கொண்டிருந்தார்கள். ராமுவின் முறையும் வந்தது. ராம் ஜந்து தடவைகள் மேடை ஏறி பரிசுகளை வாங்க வேண்டி இருந்தது. அதிக பரிசுகளைப் பெறுபவன் ராம் ஆகத் தான் இருந்தான். அதனால் அவனுக்கு பலத்த கைதட்டல் சபையில் இருந்து கிளம்பியது. ஜந்தாவது தடவை பரிசு வாங்க சென்ற போது கை தட்டும் ஒலி விண்ணைத் தொட்டது. ராம் மிகவும் மகிழ்ச்சியுடன் ஜந்தாவது முறையும் மேடை ஏறி பரிசைப் பெற்றுக் கொண்டு படியால் கீழே இறங்குகின்றான். முதல் படியில் காலை வைத்த ராமுவுக்கு கீழே இறங்க முடியவில்லை. ஒரே இருளாக இருந்தது. ராம் படியினைப் பார்க்க முடியாது கால் தவறி விழுகின்றான். அருகே நின்ற ஆசிரியாகள் அவனைத் தாங்கிப் பிடித்து ஒரு புறமாக கொண்டு செல்கின்றார்கள். முதல் உதவிக்கான ஆசிரியர்களும், மாணவர்களும் உடனே சென்று ராமினை கவனிக்கின்றார்கள். பார்வையாளர்களாக இருந்த பெற்றோரும், அக்கா சாந்தியும் அலறி அடித்துக் கொண்டு ஓடி வருகின்றார்கள். அவர்கள் உடனே ராமினை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுகின்றார்கள். ராம் பார்வையை முற்றாக இழந்து விட்டான் என வைத்தியர்களால் அறிவிக்கப்படுகின்றது. அன்று முதல்

இன்று வரை ராம் பார்வையற்று இருக்கின்றான். ராம் மீது அளவில்லா அன்பு வைத்திருந்த பெற்றோர்கள் ராம் இற்கு ஏற்பட்ட நிலையால் மனம் உடைந்து காணப்பட்டார்கள்.

சாந்தியும் தனது தம்பிக்கு நடந்ததை எண்ணி எண்ணி மிகவும் கவலையடைந்து தனது பல்கலைக்கழகப் படிப்பையும் கைவிட்டு ராமினை கவனிப்பது தான் தனது வேலை எனக் கூறி ராமினைக் கவனித்து வந்தாள். பல ஆண்டுகட்கு பின்பு அவளைத் திருமணம் செய்யுமாறு எல்லோரும் வற்புறுத்த ராம் தொடர்ந்து என்னுடன் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் சம்மதித்து இருந்தாள். அதேபோல் ராம் இனை தனது குழந்தை போல் கவனித்து வருகின்றாள். இந்திய அமைதிப்படை ஈழத்தில் போரை தொடங்க பயத்தால் வீட்டை விட்டு ஓடி சிலகாலம் கிளிநொச்சியில் இருந்தபோது பெற்றோரும் ராம் பற்றிய கவலையுடன், நோயும் சேர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக இருவரும் இறந்து விட்டார்கள். சாந்தியின் கணவன் படித்தவர் என்பதால் கனடாவுக்கு விண்ணப்பித்து, ராம் இனது நிலையையும் எடுத்துக்கூறி ராமையும் கூட்டிக்கொண்டு கனடாவுக்கு வந்து விட்டார்கள்.

குசினிக்குக்குள் இருந்து வெளியே வந்த சாந்தி ராம் இப்போதும் ஆழ்ந்த யோசனையில் இருந்த ராமினைக்கண்டதும் " என்ன தம்பி இன்னமும் யோசித்துக் கொண்டேயிருக்கிறாய்" எனக் கேட்டபடி ஓடி வந்தாள். "ஓம் அக்கா பந்தில் இருந்து பறக்க தொடங்கி பழையதை எல்லாம் நினைத்துக் கொண்டிருந்திட்டன்" என்றான் ராம்.

“அக்கா இழப்புக்கள் என்பது எவ்வளவு பொல்லாதது. எனக்கு வந்த இழப்பைப்போல் இந்த உலகத்தில் யாருக்கும் வரக்கூடாது. ஆனால் எதை இழந்தாலும் ஒரு அருமையான அக்கா எனக்கு இருக்கிறா என நினைக்கப் பெருமையாக உள்ளது” என சோகத்திலும் சாந்தியைப் பாராட்டிக் கொண்டான். அதைக் கேட்டதும் சாந்தி அழுதபடி “தம்பி எப்படி உங்கடை பார்வை திடீரென போனதோ அதே போல் தெய்வாதீனமாக திரும்ப வரும்” எனக்கூறி ராமினை சமாதானம் செய்தாள். “அக்கா பார்வையில்லாமல் பல வருடம் கழிந்து பழகிப் போட்டுது. அப்படி பார்வை வந்தால் தமிழீழம் கிடைத்த பின்பு எமது ஊரை ஒருமுறையாவது பார்க்க வேணும். அந்த மண்ணை நான் திரும்பவும் சுதந்திர பூமியாய் பார்க்க வேணும் அக்கா “ என ராம் கூற, ராம் தனது சோகத்துக்குள்ளும் தனக்குள்ள தேசப்பற்றை வெளிக்காட்டியதைக் கண்டு ராம் இன் தலையை தடவி “ராம் நீ என்ரை தம்பி என்று சொல்ல எவ்வளவு பெருமையாக இருக்கிறது. உனது ஆசை நிறைவேறும்” எனக்கூறிவிட்டு பூஜை அறைக்குள் நுழைந்தாள். ராமும் தனத பழைய நினைவுகளை மீட்க உதவிக்கு நன்றியாக சுகியை அழைத்து அவளுடன் விளையாடிக கொண்டிருந்தான்...........

.சாந்தி தமிழ் ஈழம் மலரவேண்டும் தனது தம்பியின் பார்வை திரும்ப வேண்டும் என பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

# முதல் தோல்வி

கடந்த சில நாட்களாக ஒரு சிறுகதை எழுத வேண்டும் என்று தன் மனதில் எண்ணிக்கொண்டு நாட்களை கடத்திக்கொண்டிருந்த சிவா ஒரு திடமான முடிவோடு இன்று ஒரு சில தாழ்களையும், பேனாவையும் எடுத்துக்கொண்டு கிறுக்கத் தொடங்கினான்.

அவனது கற்பனை ஆற்றலை சிதறித்தபடி, சிவா தனது ஏழாம் வகுப்பில் தனக்கேற்பட்ட உண்மைச் சம்பவம் பற்றிய நினைவு, வானத்தில் தோன்றும் சிறு நட்சத்திரம் போல தோன்றி மறைந்து கொணடிருந்தது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் நடந்த இந்த சம்பவத்துக்கு ஏன் இந்த வலிமை என சிந்திக்க தொடங்கினான் அந்த வளரும் கதாசிரியன். “அந்த சம்பவம் ஏன் இவ்வளவு ஆழமாக என் மனதில் பதியவேண்டும” என புலம்பினான் சிவா. சிவாக்கு ஏற்பட்ட வியப்பு என்னவென்றால், இந்த சம்பவம் அடிக்கடி அவன் மனதில் தோன்றுவதுமில்லை. அதனால் அடிக்கடி நினைவில் வந்து போகும் காரணத்தால் இச்சம்பவம் ஆழமாக பதியவில்லை என்பது தெளிவாக தெரிந்தது. அப்படியென்றால், “எனது சிறு வயதில் ஏற்பட்ட இந்த சிறு சம்பவம் ஏன் இன்று பூதாகாரம் எடுக்கின்றது”, “இது ஒரு சிறிய சம்பவம் தானே. எந்த வகையில் இந்த சம்பவம் எனக்கு முக்கியமாக உள்ளது” சிவாவின் சிந்தனைகள் நீண்டன. சிவாவின் சிந்தனையில் இப்போது தனது இளம் பருவ “அந்த சின்னம் சிறு சிவா” என்ற ஒரே ஒரு கதாபாத்திரம் மட்டும் தான் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான்.

சிவா இயற்கையாகவே ஒரு சிறு விடயத்தை ஓர் பெரிய விடயமாக கற்பனை செய்யும் சுபாவம் கொண்டவன். என் இந்த சுபாவம் தான் இப்படி எண்ணுகின்றது என தனக்குள் சமாதானம் செய்து கொண்டு ஒரு கதாபாத்திரத்தை தன் கற்பனைக் குகைக்குள் சிக்க வைக்க முயற்சித்தான். அவனால் முடியவில்லை. ஓடும் கடிகார முட்கள் கூட தம் நிலைமூலம் அவன் தனது இளம் பருவ சம்பவத்தின் நினைவில் சிக்கித் தவிப்பதை சீராக காட்டிக் கொண்டிருந்தன. "போதும் என் போராட்டம், என் இளம் பருவ சின்னம் சிறு சிவாதான் எனது இந்த சிறுகதையின் கதாபாத்திரம் " எனக் கூறியபடி ஒரு முடிவுக்கு வந்தான் சிவா. தோல்விகளை வெற்றியின் படிகளாக எடுத்து செயல்படுவதில் சாமர்த்தியம் கொண்ட சிவா தன் கற்பனை ஊற்றை குழப்பிக்கொண்டிருந்த நினைவையே தன் சிறுகதையாக வடிவம் கொடுக்கத் தொடங்கினான்.

யாழ்ப்பாண மாவட்டங்களில் ஏழாம் தர மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுவார்கள். இதில் தெரிவாகும் மாணவர்களுக்கு சிறந்த கல்லூரிகளில் கல்வி கற்கும் வாய்ப்பு கொடுக்கப்படும். தெரிவாகும் மாணவர்களின் பெற்றோர்கள் வருமானம் குறைந்தவர்களாயின் நிதி உதவியும் கிடைக்கும். சிவாவும் சாவகச்சேரி இந்துக்கல்லாரியில் ஏழாம் தரத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிவிட்டு அதன் முடிவை எதிர்பார்த்திருந்தான். அவனது அண்ணன் குகா புலமை பரீட்சையில் தெரிவாகி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் வாய்ப்பை பெற்றிருந்தான். சிவா ஏழாம் தரத்தில் எப்போதும் முதல் அல்லது இரண்டாம் நிலையைப் பெற்று முன்னணியில் வருவது வழக்கம். அதனால்

எப்படியும் இந்த புலமை பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுவிடுவேன் என்று சிவா திடமாக நம்பினான். அதன் பின்பு நானும் என் அண்ணன் கல்வி கற்கும் கல்லூரிக்கு போகலாம் என்ற அங்கலாய்ப்புடன் இருந்தான்.

ஒரு நாள் கல்லூரியில் பிரார்த்தனைக்கூட்டம் முடிவுற்றதும் கல்லூரி அதிபர் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளை அறிவிக்கத் தொடங்கினார். தெரிவாகிய மாணவர்களின் பெயர்களை ஒவ்வொன்றாக வாசிக்க வாசிக்கத் தன் பெயரும் எப்படியும் தெரிவாகும் என்ற நம்பிக்கையில் இருந்த சிவா தன் பெயர் குறிப்பிடப்படாது கண்டு பெரும் அதிர்ச்சியடைந்தான். அக்கணத்தில் இருந்து சிவா மனம் உடைந்து காணப்பட்டான். சிவாவைத்தவிர முதல் 10 நிலையில் வரும் அத்தனை மாணவர்களும் தெரிவாகியிருந்தனர். தனது தோல்வியால் ஏற்பட்ட துயரத்துடன் உற்ற நண்பர்களை பிரியவேண்டிய நிலையும் அவனுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது.

வீட்டை அடைந்ததும் தனிமையான ஒரு இடத்தில் இருந்தபடி விம்மி விம்மி அழுது கொண்டிருந்தான். அவனின் பெற்றோர்களும் நிலைமையை அறிந்து ஆறுதல் கூறிப்பார்த்தார்கள். சிவாவை யாராலும் தேற்ற முடியவில்லை. அழுதபடியே நித்திரையாகி விட்டான். மறு நாள் தலை குனிவோடு பாடசாலைக்கு போனான். இவனின் தோல்வி ஆசிரியர்களைக்கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. “இந்த ஆண்டுடன் புலமைப்பரிசில் பரீட்சையில் தெரிவாகிய என் நண்பர்கள் எல்லாம் வேறு கல்லூரிகளுக்கு போய்விடுவார்கள், நான் இங்கே தான் கற்கப்போகின்றேன், என் சகோதரன் கல்வி கற்கும் கல்லூரிக்கு நான் போக

முடியாது" என்றவாறு தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் சிவா.

நாட்கள் கடந்தன. அந்த ஆண்டு இறுதியுடன் அவன் நினைத்தவாறு நண்பர்கள் வேறு கல்லூரிக்கு போய் விட்டார்கள். சிவா தனித்து விட்டேன் என்ற உணர்வுடன் படிப்பை தொடர்ந்தான்.

சிறுகதை எழுதிக்கொண்டிருந்த சிவா, தன் கண்களில் நீர் வழிந்திருப்பதை உணர்ந்து பேனாவை வைத்துவிட்டு தன் கண்களை துடைத்துக் கொண்டான். தனது இந்த சிறு வயதுச் சம்பவம் தனது மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை கண்ணீர் துளிகள் கோடிட்டு காட்டின. கீறல் கீறல்களாக தோன்றிய நினைவுகளை வைத்துக் கொண்டு அந்த சம்பவத்தை பற்றி இவ்வளவுதான் எழுத முடிந்தது. தன் கற்பனை வளத்தால் அதிக விடயங்களை புகுத்த சிவா விரும்பவில்லை. "ஏன் இந்த சம்பவம் என் மனதில் ஆமமாக பதிந்தது? " சிவாவின் மனதில் இந்த கேள்வி உதித்தது. சிவா தனது வாழ்க்கையில் எதிர்கொண்ட சவால்கள், நடந்த தோல்விகள், வெற்றிகள் பற்றியெல்லாம் நினைவில் மீட்கத்தொடங்கினான். "ஆம் அது நான் அடைந்த முதல் தோல்வி, அதனால்தான் என் மனதை ஆழமாக பாதித்திருந்தது" என்றவாறு தன் மனதில் எழுந்த வினாவிற்கான விடையை தனக்குள்ளே கூறிக்கொண்டான் சிவா. தான் எழுதி முடித்த சிறுகதையை திரும்ப, விரும்ப வாசித்தான். ஒரு சிறு கதையை எழுதிவிட்டேன் என்ற திருப்தி அவனுக்கு ஏற்பட்டது.

# "விளையாட்டால் வந்த வினை"

அக்சன் 9ம் வகுப்பு குறும்புத்தனமான மாணவன். அவன் குறும்புகள் பாடசாலையுடன் மட்டும் நிற்கவில்லை. வீதியில் செல்லும் பெண்கள், முதியோர் எல்லோரிடமும் குறும்புத்தனத்தைக் காட்டுவான். அன்றும், வழமைபோல் தான் வசிக்கும் வீட்டிலிருந்து சிறு தூரத்தில் உள்ள தோம்சன் பார்க்கிற்கு நண்பர்களுடன் விளையாட வருகின்றான். தன் நண்பர்களைக் கண்டதும் அவசரமாகச் சாப்பிட்ட வாழைப்பழத்தை விழுங்கிக் கொண்டு "ஒரு விளையாட்டுக் காட்டுறன் பாருங்கோ " என்று நண்பர்களுக்கு கூறியவாறு தான் சாப்பிட்ட வாழைப்பழத்தின் தோலை நடைபாதையில் சிறிதும் கூசாமல் எறிந்தான். "டே அக்சன், என்ன வேலை செய்கிறாய், யாரும் விழுப்போகினம்" என்று நண்பன் நிசாந்தன் கூறினான். "அதுக்குத்தானே போட்டனான்" என்று அக்சன் பதில் கூற அவன் நண்பர்கள் ஆமோதித்து சத்தம் எழுப்ப நிசாந்தன் மௌனமானான். "ஐயய்யோ யாரும் விழுப்போகினம் எடுத்து ஒதுக்காகப் போடவேணும்" என்று தனக்குள் முணுமுணுத்த நிசாந்தன் நண்பர்களை மீறி எடுத்துப்போட துணிவு அற்றவனாய் விளையாட்டில் கவனம் செலுத்தினான். நண்பர்கள் எல்லோரும் சந்தோஷமாக சிரித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

மெல்ல மெல்ல இருள் கவ்வத் தொடங்கியது. இன்று நான்காம் பிறையாக இருக்க வேணும். சந்திரன்

பிறைவடிவத்தில் வானத்தில் வலம் வந்தான். அவ்வழியே வந்த முதியவர் கோபாலன் ஐயா அக்சன் எறிந்த வாழைப்பழத்தில் சறுக்கி ஐயோ என்று சத்தமிட்டவாறு கீழே விழுந்தார். சத்தம் கேட்ட அக்சன் தன் திட்டத்தில் வெற்றியீட்டியவனாக கொல்லென்று சிரிக்க நண்பர்களும் அக்சனுடன் சேர்ந்து சிரித்தார்கள். முதியவரின் அலறலைக் கேட்ட பெண்ணொருவர் சத்தமிட பலரும் அவ்விடத்தில் கூட அக்சனும் நண்பர்களும் அவ்விடத்தை விட்டு ஓடினார்கள்.

ஒரு விதமான அச்சத்துடன் களைக்க களைக்க ஓட்டமும் நடையுமாக அக்சன் வீடு வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட தாயார் செல்வராணி "அப்பாடா இன்றைக்கு கொஞ்சம் நேரத்திற்கு வந்திட்டாய், ரீவிக்கு முன்னாலே குந்தாமல் போய்க் குளித்து விட்டு வா" என்று சொல்ல நல்ல பிள்ளை மாதிரி நேரே போய்க் குளித்து விட்டு வந்து படிக்கத் தொடங்கினான் அக்சன். தாயார் செல்வராணி அவசரம் அவசரமாக இரவுச்சாப்பாடுகள் செய்து கொண்டிருந்தார். காலை 7:30 மணிக்கு வேலைக்குப் போய் 5 மணிக்கு வீட்டை வந்து வீட்டு வேலையும் பார்க்க வேண்டும். அக்சனின் அப்பா வேலையால் வர 7:00 மணி ஆகும். அவர் வேலை செய்யும் இடம் கொஞ்ச தூரம். பிரயாணத்துக்கு எப்படியும் ஒரு மணித்தியாலம் பிடிக்கும். அக்சன் பெற்றோரின் நேரக் குறைவும் இவனின் குறும்புத்தனத்திற்குக் காரணமாகிவிட்டது.

“றிங்ங் றிங்ங் றிங்ங் “ என ரெலிபோன் அலற ஓடிவந்து ரிசீவரை எடுத்தார் செல்வராணி. “ஐயய்யோ எப்ப அம்மா நடந்தது” என்று அழுதபடி போனில் பேசியதைக் கேட்டதும் அக்சனும் எழும்பி வந்தான். தாயார் பேசியதில் இருந்து அரைகுறையாக யாரோ விழுந்து ஆஸ்பத்தரியில் ஐசியுவில் இருக்கினம் எனப்புரிந்து கொண்டவனாய் “என்னம்மா யார் ஆஸ்பத்திரியில்” என்றாள். “எனக்கு மாமா முறையடா அவர் எங்களுக்கு நிறைய உதவி செய்த மனிதர், யார் பெத்த பிள்ளைகளோ தறுதலைகள் வேணுமெண்டு வாழைப்பழத்தை போட்டு விழுத்திப் போட்டாங்களாம் விழுத்திப் போட்டுச் சிரித்தாங்களாம்” என்று சொல்லி அழுததும் குற்ற உணர்வால் அக்சன் தலை குனிந்தான்.

“நாங்கள் ஆஸ்பத்திரிக்கு போகவேணும் கெதியாக வெளிக்கிடு” என்றார் செல்வராணி. “அம்மா எனக்கு நிறைய கோம்வேக் இருக்குதம்மா” என அக்சன் தயங்க “சரிசரி நான் போகிறன். அப்பா வந்ததும் கிரேஸ் கொஸ்பிற்றலுக்கு வரச்சொல்லு என்று சொல்லி விட்டு அவசரமாகக் கிளம்பினார்.

அக்சன் இடி விழுந்தவனாக உட்கார்ந்தான். தனது விளையாட்டுத்தனம் இவ்வளவு விபரீதத்தை ஏற்படுத்தி விட்டதே எனக் கலங்கினான். “பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுது” என்றாற்போல் அக்சனின் விளையாட்டால் அந்த முதியவரின் நிலைமை இருக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டான். இனிமேல்

மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தக் காரியத்தையும் நான் செய்யக் கூடாது என்று திட சங்கற்பம் எடுத்துக் கொண்டான். பூஜை அறைக்குச் சென்று சாமி படத்தின் முன் அழுதவாறு “கடவுளே அந்த முதியவரை எப்படியாவது காப்பாற்றுங்கள்” என்று மண்டியிட்டு அழுதான். இந்தக் கெட்ட வேலையைச் செய்தது தங்கள் பிள்ளையென்று தனது பெற்றாருக்குத் தெரிந்தால் என்ன நிலைமை என்ற அச்சமும் அக்சனைத் தினமும் வாட்டியது. நாட்கள் ஓடின.

கடவுள் கிருபையால் அந்த முதியவர் உயிர் பிழைத்ததாகக் கேள்விப்பட்டான் அக்சன். அவன் தன் பிழையை மன்னிக்குமாறு கடவுளிடம் மண்டியிட்டதால் போலும் விழுத்தியவன் அக்சன் என்பதும் வெளியில் தெரியவரவில்லை. அக்சன் திருந்தி நல்லவனாக கல்வியில் அதிக கவனத்தைச் செலுத்தினான்.

# கடமையுணர்வு

"கனடாவில் கோடை காலம் தொடங்குது. ஆனாலும் காலநிலை இன்னும் கோடை நிலைமைக்கு வந்ததாய்த் தெரியவில்லை. ஒரு நாள் குளிரும், மழையும், மறுநாள் வெயிலுமாய் மாறி மாறிச் செல்லுது. உண்மையில் இன்னும் கோடை கால உடுப்போடை வெளியில் செல்ல முடியாமலே உள்ளது. மே மாதம் என்றாலே எங்களுக்கு மெய்சிலிர்க்குது. இனம் தெரியாத சோகம் எங்களின் மனதை வாட்டுது." பஞ்சலிங்கம் ஐயாவின் நினைவுகளில் இவ்வாறான எண்ணங்கள் புரண்டோடத் தமிழ்ப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். கிடைக்கும் இலவசப் பத்திரிகைகளைப் படிப்பதும், வானொலி, தொலைக்காட்சிகளைப் பார்ப்பதிலும் அவரின் குறிப்பிடத்தக்களவு நேரம் செலவழிந்து விடும். அண்மையில் 2009இல் போர் நடைபெற்ற பகுதிக்குச் சென்ற பெண் ஒருவர் அங்குள்ள மாம்பழம் ஒன்றைச் சாப்பிட்டதாகவும். அதன் பின்னர் மரணமானதாகவும் செய்தி ஒன்று பேப்பரில் காணப்பட்டது. இறுதிப் போர்க்காலத்தில் இராணுவத்தால் பயன்படுத்தப்பட்ட இரசாயன ஆயுதங்களே இதற்கான காரணமெனவும் செய்தியில் குறிப்பிடப் பட்டிருந்தது. இந்தச் செய்தியைப் படித்ததும் "கடவுளே! இன்னும் சனங்கள் பல வழியிலும் சாகிறார்களே! என்ன கொடுமை" என்று தனக்குள் கூறிக் கவலைப்பட்டார் பஞ்சலிங்கம் ஐயா.

கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தில், மார்க்கம் நகரப் பகுதியில் உள்ள தங்கள் மகள் ரேவதியின் வீட்டில் கடந்த ஆறு வருடங்களாக பஞ்சலிங்கம் ஐயாவும், விசாலம்மா அம்மாவும் வசித்து வருகிறார்கள். காலை எட்டு மணிக்கெல்லாம் ரேவதியும், கணவன் மயூரனும் வேலைக்குச் சென்று விடுவார்கள். பேரப் பிள்ளைகள் சஜானா, சஜீவ் இருவரையும் விசாலம்மாதான் நித்திரையால் எழுப்பிப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு வேண்டிய எல்லாப் பணிகளையும் கவனித்துக் கொள்வார். பஞ்சலிங்கம் காலை 8:30 மணியளவில் அவர்களைப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்வார். 3:30 மணிக்கு பாடசாலை முடியும் நேரத்தில் பஞ்சலிங்கம் ஐயா பாடசாலை வாசலில் போய் நின்று விடுவார். இந்தப் பணியைச் செய்வதில் அவரின் மனது மகிழ்ச்சியுற்றது. சில நேரங்களில் மகள் ரேவதியைச் சிறு வயதில் பாடசாலைக்கு விடுவதும், திரும்ப அழைப்பதும் நினைவலைகளில் காட்சியாகத் தெரியும். சஜானா பாடசாலையை விட்டு வருவதைப் பார்க்க ரேவதி சிறுவயதில் பாடசாலையில் இருந்து வருவது போலாக இருக்கும். சில நேரங்களில் சஜானாவை ரேவதியென்றும் கூப்பிட்டிடுவார். சஜானா உடனே என்ன அம்பப்பா என்னை அம்மா பெயர் சொல்லிக் கூப்பிடிறீங்கள் என்று சொன்னவாறு தலையில் கையை வைத்தவாறு முறைத்துப் பார்ப்பாள். அவளின் முறைப்பைப் பார்த்ததும் பஞ்சலிங்கம் ஐயாவுக்கு தன் தவறு புரிந்து விடும். உடனே அவளை அணைத்துச் சமாளித்து விடுவார்.

ரேவதியின் தம்பி ராகுலன் இங்கிலாந்தில் இருக்கின்றான். சஜீவ் இனை மாறி ராகுலன் என்று மாறிக் கூப்பிட்டு அவனின் முறைத்த பார்வையையும் கண்டு களிப்பதுண்டு. பாடசாலை வாசலிலும் பஞ்சலிங்கத்தாருக்கு ஒரு சிறு நண்பர் வட்டம் உண்டு. இவர் போன்ற முதியோர் சிலரும், சில பெற்றோரும் பாடசாலை வாசலில் கண்டு பழகி நண்பர்களாகி விட்டார்கள். தமிழர்கள் மட்டுமன்றி வேறு இனத்தவர்களும் இவரின் நண்பர்களாக இருந்தனர். இவரின் சுபாவம் தான் அதிக நண்பர்களைத் தேடிக் கொடுத்தாலும், சஜானா, சஜீவ் ஆகியோரின் சுபாவங்களும் இவருக்கு அதிக நண்பர்களைத் தேடிக் கொடுத்தன என்று கூறலாம்.

பேப்பரைத் தூக்கிப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது பத்திரிகைக்குள் இருந்து ஒரு முழுவர்ண துண்டுப்பிரசுரம் கீழே விழுந்தது. அதைக் கவனித்த பொழுது "தமிழினப் படுகொலை நாள்" என்ற தலைப்புத் தென்பட்டது. பத்திரிகையை ஒரு புறம் வைத்து விட்டுத் துண்டுப் பிரசுரத்தைப் படித்தார். குயின்ஸ் பார்க் முன்றலில் எதிர்வரும் சனிக்கிழமை நிகழ்வு நடக்கவிருப்பதாக இருந்தது.

"நிச்சயம் நான் போகவேணும். நான் மட்டுமல்ல. கனடாவில் உள்ள ஒவ்வொரு தமிழனும் போகவேணும்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டார் பஞ்சலிங்கம் ஐயா.

"நடந்த கொடுமையை நாங்கள் எப்படி மறப்பது. வருடத்துக்கு ஒரு முறை என்றாலும் எல்லாரும் போய் அழுது புலம்பிவிட்டு வருவம். எவ்வளவு கஸ்டங்களுக்கு மத்தியில் இந்த நிகழ்வினை ஒழுங்கு செய்யினம். சில சனங்கள் இப்படியான நிகழ்வுகளைப் பற்றி அக்கறைப் படுகுதுகள் இல்லை." என்று ஏக்கத்துடன் பெருமூச்சு வீட்டார்.

இவரின் பெருமூச்சைக் கவனித்த விசாலம்மா "என்னப்பா பெருமூச்சு விடுறியள்" என்றார். "கடவுள் கிருபையால் நீயாவது எனது புலம்பலைக் கேட்க இருக்கிறாய்" என்று தொடங்கித் துண்டுப்பிரசுரத்தில் உள்ள நிகழ்வைப் பற்றியும், நிறையச் சனம் சேர வேண்டும் என்ற தனது ஏக்கத்தையும் பற்றி விபரித்துக் கொண்டார்.

"உந்த நிகழ்விற்கு நிறையச் சனங்கள் வருங்கள் அப்பா. நீங்கள் ஏன் அதைப் பற்றி யோசிக்கிறீங்கள்" என்று ஆறுதல் சொன்னார் விசாலம்மா.

"நான் யோசித்துக் கொண்டு இருப்பதை விட இந்த நிகழ்வுக்கு என்னால் முடிந்தளவு கஷ்டப்பட்டு சனங்களைப் போகப் பண்ணவேணும்" என்றார் பஞ்சலிங்கம்.

"என்னப்பா செய்யப் போறீங்கள்" என்று பயந்தபடி கேட்டார் விசாலம்மா.

"இன்னும் ஐந்து நாள் கிடக்குதுதானே நிகழ்விற்கு. இந்த ஐந்து நாளும் நான் கொஞ்சம் பிரசாரம் செய்யப் போகிறேன்.

நாங்கள் எல்லாரும் குயின்ஸ் பார்க் இல் நடக்கும் தமிழினப் படுகொலை நாள் நிகழ்விற்குப் போய்க் கலந்து கொள்வது ஒரு வரலாற்றுக் கடமை என்று சொல்லப் போகிறேன்” என்றார்.

“நீங்கள் சொல்லுறது சரிதானப்பா, வீட்டிற்குள் இருந்தபடி நாங்கள் இதைச் செய்யலாம் தானே. நானும் கதைக்கிற ஆட்களுக்குச் சொல்லுகின்றேன்” என்று விசாலம்மாவும் பஞ்சலிங்கத்தாரின் பணிக்கு ஊக்கம் கொடுத்தார்.

விசாலம்மாவின் இந்தப் பேச்சு பஞ்சலிங்கத்தாருக்கு மேலும் ஊக்கம் கொடுத்தது. ஒவ்வொருவராய்த் தொலைபேசியில் அழைத்துச் சொல்லத் தொடங்கினார். அவருக்குத் தெரிந்தவர்கள் எல்லாருக்கும் பஞ்சலிங்கம் ஐயா மீது மிகவும் மதிப்பும், அன்பும் இருந்தது. அவர் இதைக் கூறியதும் மறுப்பின்றி நாங்கள் நிச்சயம் போவோம் என்று கூறியதோடு அவரின் முயற்சியையும் பாராட்டிக் கொண்டனர்.

ஒரு சிலர் “ஐயா நீங்களே இந்த வயதில் இதைச் செய்யும் பொழுது நாங்களும் ஏதாவது செய்ய வேண்டும். நாங்களும் உங்களைப் போல் எமக்குத் தெரிந்தவர்களுக்குச் சொல்லுவம்” என்றனர்.

ஒரு சிலர் “எங்களுக்கும் போக விருப்பம். ஆனால் நாங்கள் சிறீலங்காவிற்குப் போகவேணும். அதுதான் யோசிக்கிறம் .... என்று சொல்லத் தொடங்க இடைமறுத்துப் பேசி அவர்களுக்கும் தைரியம் ஊட்டினார்.

“ஏன் ஐயா உங்களுக்கு இந்த வேலை?” என்று சொல்லி ஒரு சிலர் அவரை நோகடிக்கவும் செய்தனர்.

அதைப் பற்றிச் சிறிதும் கலங்காமல் திட்டமிட்டவாறு தன் பணியைச் செய்து கொண்டிருந்தார்.

நேரத்தைக் கவனித்த விசாலம்மா ”நீங்கள் பாடசாலைக்குப் பிள்ளைகளைக் கூட்டப் போகும் நேரம் வந்து விட்டது” என்று சொன்னதும் “நேரம் போனதே தெரியவில்லை” என்று சொல்லிக் கொண்டு புறப்படத் தயாரானார்.

பாடசாலை வாசலிலும் தனது பிரசாரத்தைச் செய்தார். வேறு இனத்தைச் சார்ந்த நண்பர் ஒருவரிடமும் விடயத்தைக் கூற அவரும் தான் இந்த நிகழ்விற்கு வரப்போகின்றேன் என்று கூறியது அவரின் மனதிற்கு நிறைவைத் தந்தது. உடனே அவரைக் கண்கள் கலங்கக் கட்டித் தழுவினார் பஞ்சலிங்கம். இந்த நேரத்தில் பாடசாலையை விட்டு வந்த சஜானாவும், சஜீவ்வும் அம்மப்பாவிடம் ஓடி வந்து “என்ன அம்பப்பா நடந்தது?” என்று கேட்டார்கள்.

“சரி வாங்கள். நாங்கள் பேசிக்கொண்டே போவோம்” என்று ஆரம்பித்து அவர்கள் புரியும் வண்ணம் விடயங்களை எடுத்துக் கூறியவாறு வீட்டை நோக்கி நடந்தார்.

கதையைக் கேட்ட பிள்ளைகள் “நாங்களும் அங்கு போகவேணும். அம்மாவிடம் கேட்கப் போகின்றோம்” என்று

சொன்னதும் "ஆமாம் எங்கள் பரம்பரையும் தமது பணியைச் செய்வார்கள்" என்று தனக்குள் நினைத்துக் கொண்டார். மேலும் "எங்கள் ஈழ மண்ணைக் கூடக் காணாத இங்கு பிறந்து வளர்ந்த இளசுகள் எவ்வளவு தூரம் தேசப்பற்றுடன் பணியாற்றுகிறார்கள்" என்று தனக்குள் நினைத்துக் கொண்டார்.

வீட்டைச் சென்றடைந்ததும் பேரப்பிள்ளைகளை விசாலம்மாவிடம் பாரம் கொடுத்து விட்டு தனது பிரசாரப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டார். வானொலி நிகழ்விலும் பங்குபற்றித் தன்னைப் போல் மற்றையவர்களும் செய்யுமாறு ஊக்குவித்தார். இவருக்குப் பின் வானொலியில் கலந்து கொண்டவர்களும் இவரைப் போலாகத் தாமும் செய்யப் போகின்றோம் என்று உறுதிபடத் தெரிவித்தனர். இவற்றைச் செவியுற்ற வானொலிக் கலைஞர்களும் உற்சாகத்துடன் திரும்பத் திரும்ப அறிவித்தல் கொடுத்துக் கொண்டேயிருந்தனர்.

"மிகுதி ஆட்களுக்கு இரவில்தான் போன் பண்ண வேண்டும். அப்பதான் அவர்களைப் பிடிக்கலாம். விசாலம்மா, கொஞ்சம் களைப்பாயிருக்குது. நான் கொஞ்சம் களைப்பாறப் போகின்றேன்" என்று சொல்லிக் கொண்டு சோபாவில் சாய்ந்தார் பஞ்சலிங்கம்.

அவரின் மனதில் 2009 ஆம் ஆண்டில் ஈழத்தில் நடந்த தமிழினப் படுகொலைகள் பற்றிய எண்ணங்களே

ஓடிக்கொண்டிருந்தன. தொலைக்காட்சிகள் மூலமாகவும், இணையத்தளங்கள் மூலமாகவும் கண்ட கொடூரக் காட்சிகள் அவரின் மனத்தைக் குழப்பிக் கொண்டேயிருந்தன. “உலகெங்கும் உள்ள தமிழர்கள் எவ்வளவு தூரம் போராட்டம் நடத்தினார்கள். ஆனால் சர்வதேசம் எம்மைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டதே” என்று கலங்கினார். அவரின் கண்களில் இருந்து பொலு பொலுவெனக் கண்ணீர் வழிந்தது. கண்ணை மூடியபடி சோபாவில் சாய்ந்திருந்த அவரின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் முகத்தில் வழிந்தவாறு இருந்தது.

அப்போது நேரம் மாலை 6 மணி. கதவைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் நுழைந்தனர் மயூரனும், ரேவதியும். கதவுச் சத்தம் கேட்டதும் சஜானாவும், சஜீவும் ஓடிப்போய் அவர்களைக் கட்டிப் பிடித்தனர்.

“அம்மா! இன்றைக்கு அம்மப்பா ஸ்கூலடியில் ஸ்ரபனா வின் கிராண்ட் பாதரைக் கட்டிப் பிடித்து அழுதவர்” என்றாள் சஜானா. உடனே “ஏன் அப்பா” என்று கேட்டபடி சோபாவில் அரைத்தூக்கத்தில் இருந்த பஞ்சலிங்கத்திடம் வந்த ரேவதி அவரின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைக் கண்டதும் பயந்தவாறு “அப்பா அப்பா ஏன் அழுகிறீர்கள்” என்றாள். அறைக்குள் உடுப்பு மாற்றிக் கொண்டிருந்த மயூரனும் ஹோலுக்கு ஓடி வந்தான். “அவருக்கு 2009 ஆம் ஆண்டு நினைவுகள் ரேவதி” என்று சொல்லியவாறு விசாலம்மாவும் ஹோலுக்கு வந்தார்.

நடந்த ஆரவாரத்தால் முழித்துக் கொண்ட பஞ்சலிங்கம் “எனக்குக் கடவுளேயென்று ஒன்றுமில்லை. மே மாத தமிழினப் படுகொலை நாள் நினைவுகள் தான்” என்றதும் ரேவதி நிலைமையைப் புரிந்து கொண்டாள். விசாலம்மா காலையில் இருந்து தனது கணவன் செய்த பணியினை விவரித்துக் கூறினார். ரேவதி ஓடி வந்து தந்தையை அணைத்தவாறு “அப்பா! உங்களை நினைக்கப் பெருமையாக இருக்கின்றது. உங்களைப் போல் தமிழினம் முழுவதும் சிந்தித்தால் பல விடயங்களைச் சாதித்திருக்கலாம்” என்றாள். மேலும் ரேவதி, “நானும் எனக்குத் தெரிந்தவர்கள் எல்லோருக்கும் சொல்கிறேன். நாளை வேலையிடத்திலும் சொல்கின்றேன்” என்றாள்.

மயூரனும் நிகழ்வு ஒருங்கமைப்பாளர்களைத் தொடர்புகொண்டு நிகழ்வு பற்றிய துண்டுப்பிரசுரத்தின் பதிவொன்றை மின் அஞ்சலில் அனுப்புமாறு கேட்டுக் கொண்டான். தானும் மின் அஞ்சல் மூலமும், முக நூல் மூலமும் நிகழ்வு பற்றிய தகவலைத் தன்னுடன் தொடர்பில் உள்ளவர்கள் எல்லோருக்கும் அனுப்புவதாகக் கூறினான்.

பஞ்சலிங்கத்தில் இருந்து ஆரம்பித்த பணியில் முழுக் குடும்பமே ஈடுபட்டது. அவர்களின் சில நண்பர்களும், உறவினர்களும் இவர்களின் முயற்சிக்கு வலுச்சேர்த்தனர்.

இந்த நிகழ்வில் நிறையப் பேர் கலந்து தமது உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்போடு பஞ்சலிங்கம்

ஐயா ஒவ்வொரு மணித்துளியையும் கழித்துக் கொண்டிருந்தார். நிகழ்விற்கு வர விரும்பிய வேற்று இனத்தவர்களையும் அழைத்துக் கொண்டு செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளையும் செய்து கொண்டிருந்தார். இரவில் படுக்கைக்குச் சென்றபோது ரொறன்ரோ குயின்ஸ் பார்க் மைதானத்தில் மக்கள் கூட்டம் நிறைந்து நிற்பது போன்ற ஒரு காட்சி அவர் முன் நிழலாடியது.

(யாவும் கற்பனை)

முன்பதிப்பு- நன்றி: உதயன் பத்திரிகை, கனடா மே 17, 2013

தமிழினப் படுகொலை நாள்

# போதனை

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை.

ஞாயிற்றுக் கிழமைகளில் காந்தனின் வீட்டில் எல்லோரும் கொஞ்சம் அதிகமாகத் தூக்கம் செய்து பிந்தி எழும்புவது வழமை. நேரம் காலை 10 மணியாகி விட்டது. இவனுக்குச் சிறிது நேரம் முன்பே கலா எழுந்து சமையலறையில் காலைச் சாப்பாடு செய்து கொண்டிருந்தாள். இவர்கள் குடியிருப்பது பதினான்கு மாடிகள் கொண்ட ஒரு கொண்டோமேனியம். இதில் ஏழாவது மாடியில் கடந்த நான்கு வருடங்களாகக் குடியிருக்கிறார்கள். காலைக் கடனை முடித்துக் கொண்டு ஹோலுக்குள் வந்த காந்தன் யன்னல் அருகே சென்று திரைச்சீலையை விலக்கி வெளியில் பார்த்தான்.

கடந்த மூன்று நாட்களாகத் தொடர்ச்சியாகக் கொட்டிய பனிமழையால் எங்கும் கும்பல் கும்பலாகப் பனித்திடல்கள் காணப்பட்டன. சின்னஞ் சிறு மலைகளாக வெண்ணிறத் திடல்கள் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. “போக்குவரத்திற்கு எவ்வளவு இடைஞ்சல் கொடுத்தாலும் பனி தரும் அழகு ஒரு தனி அழகுதான்” என்று தனக்குள் நினைத்துக் கொண்டான். பனி தரும் இயற்கை அழகுக்கு முடி வைத்தாற்போல் தூரத்தே “ரொறன்ரோ சிஎன் ரவர்” தெரிந்தது. இது 553 மீற்றர் உயரமுடைய ஒரு கண்காணிப்புக் கோபுரம். பிரசித்தி பெற்ற இந்தக்

கோபுரத்தை வீட்டில் இருந்து பார்க்க முடிவது ஒரு பெரும் பேறு என்று காந்தன் எண்ணுவதுண்டு.

“மெயின் ரோட்டுக்கள் எல்லாம் கிளீன் பண்ணிட்டாங்கள் போலத் தெரியுது” என்று கலாவைப் பார்த்துச் சொன்னபடி சமையலறைப் பக்கம் வந்தான் காந்தன்.

“கலா! இன்றைக்குத் தான் கொஞ்சம் வெளிச்சுக் கிடக்குது. வெளி வேலைகளை முடிக்க வேணும்” என்றான்.

கலாவும் பதிலுக்கு “ஓமப்பா நிறைய வேலை இருக்குது. பிள்ளைகளை எழுப்புங்கோ. நீங்களும் கெதியாய்க் குளிச்சிட்டு வெளிக்கிடுங்கோ”.

“கோயிலுக்கும், கடைகளுக்கும் தானே போகவேணும்” என்றான் காந்தன்.

“நல்லாயிருக்குது உங்கள் ஞாபக சக்தி. இன்றைக்கு இரண்டு கோயிலுக்குப் போக வேணும். வழமையாகப் போகின்ற அம்பாள் கோயில். பிறகு சிவன் கோவிலுக்குப் போய் கிரக அர்ச்சனையும் செய்ய வேண்டும். எல்லாருக்கும் கிரக நிலை சரியில்லை” என்று கலா சொல்லிக்கொண்டிருக்க “சரி சரி கோயிலுக்குப் போட்டுக் கடை அலுவல்களையும் முடித்துக் கொண்டு வருவம். அப்ப இன்றைக்குச் சாப்பாட்டைக் கடையிலை வாங்குவம்” என்றான் காந்தன்.

“நான் இன்னும் முடிக்கவில்லை. கொஞ்சம் கேளுங்கோ!. பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு கோயிலுக்குப் போய் விட்டு அவையை வீட்டில் இறக்கி விட்டிட்டு மிச்ச அலுவல்கள் பார்க்க வேண்டும். அவைக்கு நிறைய “கோம் வேர்க்” இருக்காம். அவைக்குப் பகல் சாப்பாடும் செய்யிறன். எங்கடை சீதேவி அம்மான்ரை அந்தியேட்டி கந்தசாமி கோவில் மண்டபத்திலை இருக்குது. நாங்கள் அங்கே சாப்பிடலாம். பிறகு கடை அலுவல்களையும் கவனிப்போம்.” என்று கூறி முடித்தாள் கலா.

“பெரிய லிஸ்ட்டே வைச்சிருக்கிறியள். சரி உங்கடை அலுவல்களை முடித்திட்டு என்ரை அலுவலைப் பார்க்கிறன்” என்றான் காந்தன். “கொஞ்ச நேரம் உங்கடை அலுவல்களைப் பாருங்கோ. ஆனால் மாலை ஆறு மணியளவில் திரும்பப் போகவேணும்.” என்று கலா சொன்னதும் பொறுமை இழந்தவனாய் “பிறகென்ன வேலை. இது சரிவராது” என்று கடும் தொனியில் சொன்னான் காந்தன்.

“எங்கடை பெரியப்பான்ரை மகன் குமாரை ஐசியு விலை வைச்சிருக்கினமாம். நிமோனியா வந்து கடுமைப் படுத்திப் போட்டுதாம். சரியாப் பயப்பிடினம். அவருக்குச் சின்னக் குழந்தைகள் வேறு. நாங்கள் இன்னும் போய்ப் பார்க்கவில்லை. இரண்டு நாளாய்ப் போச்சுது. செத்த வீடும் ஒன்று கிடக்குது. எங்கடை ஊர் ஆட்கள். நான் யாரும் போற

ஆட்களோடை போறன். நீங்கள் ஆஸ்பத்திரியாலை வந்து உங்கடை வேலையைப் பாருங்கள்" என்றாள் கலா.

கலா செத்த வீட்டுக்கு வேறு யாருடனும் போறன் என்று சொன்னதே பெரிய விடயமாகப் பட்டது காந்தனுக்கு. ஒரு கதையும் சொல்லாமல் குளியலறைக்குள் போய் விட்டான். ஒவ்வொருதராக குளித்து வெளிக்கிட்டுத் தயாராக ஒரு மணி நேரம் போய் விட்டது.

*****

இல்லத்தரசி கலாவின் எண்ணப்படி கோயில், கடை, அந்தியேட்டி என்றெல்லாம் ஓடி ஓடி முடித்து விட்டாயிற்று. மாலை ஆறு மணிக்கு காந்தனும், கலாவும் வைத்தியசாலைக்கு குமாரைப் பார்க்கச் சென்றார்கள். குமாரை உடனே போய்ப் பார்க்க வில்லையே என்று கலா கவலைப்படும் படியாக நான் நடந்து கொண்டு விட்டேனே என்ற கவலை காந்தனுக்கு இருக்கத்தான் செய்தது. குமாரின் தந்தையார் பற்றி கலா அடிக்கடி சிவாப் பெரியப்பா அது செய்தவர், இது செய்தவர் என்று உயர்வாப் பேசுவதும் காந்தன் கவலைப் படுவதற்கு ஒரு காரணமாக இருந்தது. காந்தன் வீட்டில் இருந்து புறப்படுவதற்கு முன் பேசி வைத்தவாறு காந்தனின் நண்பன் குணாவின் வீட்டுக்கு முன்னால் காரை நிறுத்திவிட்டு தொலைபேசியில் குணாவை அழைத்தான். ஏற்கனவே தயாராக இருந்த குணா "சரி நான் வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டு வாசலை

நோக்கி நடந்தான். ஏற்கனவே குணாவும் தங்களுடன் வருகின்றார் என்பதை அறிந்திருந்ததால் கலா காரின் பின்புறத்திலேயே அமர்ந்திருந்தாள். குணா காரில் ஏறும்பொழுது “என்ன சமையல் வாசனை மூக்கைத் துளைக்குது” என்று கேட்டாள் கலா. “இன்று பிரியாணி செய்தேன். எனது சமையல் என்றால் சும்மாவா” என்று குணாவும் நகைச்சுவையாகப் பதில் சொன்னான்.

********

ஹம்பர்வலி வைத்தியசாலையில் ஐசியுவில் அனுமதிக்கப்பட்டிருந்த குமாரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. நாங்கள் போகும் பொழுது குமாரின் சகோதரர் ரூபன் அங்கு குமாருக்கு அருகில் நின்றார். குமார் வாயால் எதுவும் பேசக் கூடிய நிலையில் இல்லை. ஆனால் விழிப்பாகத்தான் இருந்தார். குமாரின் நிலையைப் பார்த்ததும் கலாவின் கண்களில் இருந்து பொலு பொலுவென கண்ணீர் வழிந்தது. குமாரின் தலையைத் தடவியவாறு “எப்படி அண்ணா இருக்கிறீர்கள்” என்றாள் கலா. அங்கு நின்ற ரூபன் கலாவுக்கும், காந்தனுக்கும் குமாரின் உடல்நிலை பற்றி விளக்கமாகக் கூறினான். “அண்ணி இப்பதான் குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு வீட்டை போகிறா. அவ நேற்று இரவு நித்திரை கொள்ளவேயில்லை. நான் தான் பேசிக் கொஞ்ச நேரம் நித்திரை கொண்டு விட்டு வாங்கள் என்று அனுப்பி வைத்தேன்.” என்று ரூபன் கூறியதும் “பரவாயில்லை நான்

ரேவதியுடன் இன்று தொலைபேசியில் கதைத்தேன்” என்று கலா பதிலளித்தாள். உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த காந்தன் குமாரின் கையைப் பற்றி குமார் பயப்பட வேண்டாம். உமக்கு எல்லாம் சரியாய் விடும் என்று சொல்லிக் கொண்டு தன் சட்டைப்பையில் இருந்து ஒரு விபூதி பைக்கற் இனைத் திறந்து “புட்டபர்த்தி விபூதி கொஞ்சம் இருக்கு. பூசி விடுகிறன். உங்களுக்கு நல்லது.” என்று சொல்லிக் கொண்டு விபூதி பூசக் குமாரின் தலைப்பக்கமாக வர குமாரும் தலையை அசைத்து நன்றியுடன் பார்த்தான். விபூதி பூசியதும் காந்தனின் கையை தனது கையை உயர்த்திப் பற்றிக் கொண்டு குமார் ஏதோ சொல்ல முயற்சித்துப் பேச முடியாமல் திணறினான். குமாரின் படுக்கையருகில் அவனது இரண்டு குழந்தைகளின் படங்களும் இருந்தன. குமார் தனது மற்றக் கையால் குழந்தைகளின் படத்தைத் தொட்டுக் காட்டியபடியே விம்மி விம்பி அழுதான். குமார் பேசுவதற்குச் சிரமப்படுவதைக் கவனித்து விட்டு ரூபன் எழுதும் பலகையை எடுத்து குமாரிடம் கொடுத்தான். குமார் எழுதுபலகையில் “என் குழந்தைகளுக்காக நான் வாழ வேண்டும். நான் இல்லா விட்டால் அவர்கள் கஸ்டப்படுவார்கள்” என்று எழுதிக் காட்டினான். உடனே காந்தனும், கலாவும் “குமார் அண்ணா நீங்கள் கவலைப்படாதீங்க. உங்களுக்கு ஒன்றும் நடக்காது” என்று ஒரே நேரத்தில் சொல்லிக் குமாரின் கையைப் பற்றி ஆறுதல் கூறினார்கள். குணாவும் அமைதியாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தவன் “குமார்

ஒன்றுக்கும் யோசியாதீர்கள். நீங்கள் கவலைப் படாமல் இருந்தால் விரைவாக வீட்டை போகலாம்" என்று ஆறுதல் கூறினான். தம்மால் முடிந்தவரை குமாருக்கு ஆறுதல் வார்த்தைகள் பேசிவிட்டு காந்தன், கலா, குணா மூவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

காரில் ஏறியதும் கலா குணாவைப் பார்த்து "இன்றிரவு தோசை சுடுவதற்கு மா புளிக்க விட்டிருக்கின்றேன். எங்களோடு வீட்டை வாங்கோ. நீங்கள் சாப்பிட்ட பிறகு காந்தன் உங்களை இறக்கி விடுவார்" என்றாள். குணா "நான் பலமுறை சாப்பிட்டிருக்கிறேன் தானே. இன்று நான் வீட்டுக்குப் போகிறேன். இரவுச்சாப்பாடு வீட்டில் போதியளவு இருக்கிறது" என்று கூற "இல்லை எப்படியும் குணா நீ வரவேண்டும்" என்று காந்தன் கூற குணாவும் "நீங்கள் இருவரும் இனி விடமாட்டீர்கள். சரி வருகிறேன்" என்று சம்மதம் தெரிவித்தான்.

சற்று நேரம் காரினை ஓடிக்கொண்டிருந்த காந்தன் வழமையான உரையாடல் ஒன்றும் வரவில்லையே என்ற ஆச்சரியத்துடன் குணாவைப் பார்த்தான். குணாவின் முகம் மிகவும் வாட்டமாக இருந்ததுடன் அவனது கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் வடிவதைக் கண்டதும் "என்ன குணா. எதற்கு கவலைப்படுகிறாய். அழுகிறாய் போலிருக்கு" என்று காந்தன் கேட்டான். அவசரம் அவசரமாக கண்களைத் துடைத்த குணா "ஒன்றுமில்லை கண்ணில் தூசி விழுந்து விட்டது போல" என்று கூறிச் சமாளிக்க

முனைந்தான். கலாவும் “ என்ன குணா அழுகிறாரா? ஆச்சரியமாய் இருக்குது. சொல்லுங்கோ குணா என்ன பிரச்சினை. நாங்கள் உங்கள் மனது புண்படும்படி ஏதாவது சொல்லி விட்டோமோ” என்று கேட்க “ஐயோ அப்படி ஒன்றும் இல்லை” என்றான் குணா. இதற்கே மேல் குணாவை ஏதும் கேட்டு தொல்லை கொடுக்க விரும்பாமல் காந்தனும், கலாவும் அமைதியாகி விட்டார்கள்.

*********

வீட்டுக்குத் திரும்பியதும் பிள்ளைகள் ஓடிவந்து வரவேற்றார்கள். “குணா அங்கிள் எப்படி இருக்கிறீர்கள்” என்று குணாவைப் பார்த்து கேட்க குணாவும் “ஹலோ நீலா ஹலோ நீனா நான் சுகம் நீங்கள் எப்படி” என்று பதிலளித்துக் கொண்டான். கலா பிள்ளைகளைப் பார்த்து “ஹோம் வேர்க் முடிஞ்சுதா என்று கேட்க இல்லையம்மா இன்னும் செய்து கொண்டிருக்கிறோம்” என்று சொல்லி விட்டுத் தமது அறைகளை நோக்கி ஓடினார்கள். கலா சமையலை கவனிக்கத் தொடங்கினாள். ஆனால் கலாவும் இடைக்கிடை ஹோலுக்குள் வருவதும் போவதுமாக இருந்ததோடு குணாவின் உரையாடலைக் கேட்டபடி தான் இருந்தாள். காந்தன் குணாவையும் அழைத்துக் கொண்டு வீட்டு ஹோலில் உட்கார்ந்தார்கள். குணாவின் மனநிலையை நன்கு உணர்ந்தவனாகக் காந்தன் “சரி குணா இப்ப சொல்லு. ஏன் கவலைப்படுகிறாய்” என்று கேட்க குணா சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு “காந்தன் நான்

எனது மகனைப் பிரிந்து இனியும் வாழ விரும்பவில்லை" என்றான். காந்தனும் "நல்ல முடிவுதானே. அதுக்கு ஏன் கவலைப்படுகிறாய்" என்று கேட்க "மாலதியின் ஆத்திரப் போக்கால் பிரிந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. என்னிலும் நிறைய பிழைகள் இருக்குது. மாலதி திரும்பி வந்து என்னோடு வாழ விரும்பியும் எனது பிடிவாதக் குணம் இடம் கொடுக்கவில்லை. எங்களின் சண்டையால் எனது மகன்தான் பலிக்கடா ஆக்கப்பட்டிருக்கிறான். இன்று குமார் தனது பிள்ளைகளுக்காக வாழ வேண்டும் என்று சொன்னதும் எனது பிடிவாதம் இருந்த இடம் இல்லாமல் போய் விட்டது. எனது மகனுக்காகவாவது நான் மாலதியுடன் சேர்ந்து வாழத்தான் வேண்டும்" என்று தனது மனக்கவலை எல்லாத்தையும் கொட்டித் தீர்த்தான். குணாவின் பேச்சைக் கேட்டதும் காந்தன் மகிழ்ச்சியுடன் கலாவைக் கூப்பிட்டு "கலா இஞ்சை வாரும். மாலதிக்குச் சொல்லும். நாளைக்கு குணா அவர்களை வந்து கூட்டி வருவார். நாங்களும் வாறம் என்று சொல்லும்" என்று சொன்னான். கலாவும் குணாவைப் பார்த்து "நீங்கள் நல்ல முடிவு எடுத்துள்ளீர்கள். நாங்கள் இதுக்குத்தான் காவல் இருந்தோம். மாலதியும் நல்ல பிள்ளை. அவள் செல்லமாய் வளர்ந்தவள். கொஞ்சம் முற்கோபம் இருக்கு." என்று சொன்னாள். உடனே அவசரப்பட வேண்டாம் "மாலதி என்னிடம் மன்னிப்பு கேட்டு எவ்வளவு மன்றாடியும் மாட்டேன் என்று சொல்லிப் போட்டேன். இப்ப அவள் என்ன சொல்வாளோ" என்று சொல்ல கலா பதிலுக்கு "இல்லை குணா உங்கள்

இருவரைப் பற்றியும் நமக்குத் தெரியும். உங்களை விரைவில் சேர்த்து வைக்கிறோம் என்று ஏற்கனவே மாலதிக்குச் சொல்லி வைத்திருக்கின்றோம். மாலதி நீங்கள் எப்ப வந்து கூப்பிடுவீர்கள் என்று காத்துக் கொண்டு தான் இருக்கிறாள்." என்று சொல்லி விட்டு அவசரமாக மாலதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். மாலதியின் சம்மதத்தையும் கலா பெற்றுக் கொண்டதும் குணா எழுந்து காந்தனைக் கட்டித் தழுவியதோடு கலாவையும் பார்த்து நன்றி கூறினான்.

திட்டமிட்டபடி காந்தன், கலா, பிள்ளைகள், குணா எல்லோரும் இரண்டு கார்களில் சென்று மாலதியையும், குணாவின் மகன் ரீகனையும் அழைத்துக் கொண்டு திரும்பினார்கள். குணாவையும், மாலதியையும் சேர்ப்பதில் குமாரின் பங்களிப்பு எவ்வளவு உயர்ந்தது என்று தமக்குள் பேசிக்கொண்டார்கள். குமார் விரைவில் சுகமாக வேண்டும். நாளைக்குத் திரும்பவும் குமாரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்றும் முடிவு எடுத்தார்கள். மறுநாள் காந்தன், கலாவுடன், குணாவும், மாலதியும் சேரந்து போய் குமாரைப் பார்த்தார்கள். குமார் விரைவில் சுகமாக வேண்டும் என்ற பிரார்த்தனை எல்லோர் மனதிலும் ஆழமாக எழுந்தது.

(யாவும் கற்பனை)

முன்பதிப்பு – நன்றி கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் (சங்கப்பொழில் 2016 இற்காக எழுதியது).

# என்றென்றும் அவளோடு .....

(அறிவியல் புனைகதை)

சிக்காகோ ஓ ஹரே சர்வதேச விமானநிலையத்தில் இருந்து காலை 10:40க்குப் புறப்பட்ட அமெரிக்கன் எயர்லைன்ஸ் விமானம் ரொறன்ரோ நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

“முப்பத்தாறு வருடங்களுக்குப் பிறகு எனது நண்பன் குமாரினை சந்திக்கப் போறேன் என்று நினைக்க மகிழ்ச்சியாகவும், மிகவும் நெருங்கிப் பழகிய நண்பன் ஒருவனுடன் கடந்த முப்பத்தாறு வருடங்களாக எந்தவித தொடர்பும் இல்லாமல் இருந்திட்டன் என்று நினைக்க குற்ற உணர்வும் என் மனதைப் போட்டு உறுத்துது” என்று புலம்பிக் கொண்டு விமானத்தில் இருக்கையில் இருந்தவாறு தனது இளமைக்கால நினைவுகளை மனதில் மீளோட்டம் செய்து கொண்டிருந்தான் சுதன். அவனோடு பயணம் செய்து கொண்டிருந்த மனைவி ரேகா நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். விமானத்தின் பறப்பு வேகத்தையும் மேவிய வேகத்துடன் கடந்த கால நினைவுகள் சுதனின் மனதில் அலையலையாக எழுந்தன...............

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரித் தொகுதியில் அமைந்து எண்ணற்ற கலைத்துறை மாணவர்களையும் ஒருசில விஞ்ஞான மாணவர்களையும் பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் அனுப்பி வரும்

சாதனையால் சாவகச்சேரி இந்துக்கல்லூரி என்று எல்லோராலும் நன்கு அறியப்பட்ட ஒரு முதன்மைநிலைக் கல்லூரியாக விளங்கும் கல்லூரியில் தரம் நான்கு முதல் சாதாரண தரம் வரை ஒன்றாகப் படித்தவர்கள் சுதனும், குமாரும். அவர்களின் வீடுகள் கல்லூரியிலிருந்து எதிர்த்திசைகளில் பத்து மைல் தூர இடைவெளியில் இருந்தபோதும் கல்லூரியில் இணைபிரியா நண்பர்களாக இருந்தார்கள்.

சாதாரணதரக் கல்விக்குப் பின்னர் உயர்தரத்தில் சுதன் உயிரியல் துறைக்கும், குமார் கணிதத்துறைக்கும் சென்று படிக்க வேண்டியிருந்ததால் எற்பட்ட பிரிவினைக் கூட ஏற்றுக்கொள்ளமுடியாது இருவரும் திண்டாடியவர்கள். உயர்தர வகுப்பிலும் இரசாயன பாடத்துக்குச் சுதனின் வழிகாட்டலும், பௌதீகப் பாடத்திற்கு குமாரின் வழிகாட்டலும் பெற்றுக் கொண்டு இருவரும் தத்தமது துறைகளில் சிறப்பாகப் படித்தார்கள்.

உயர்தரப் பரீட்சையில் சுதன் கொழும்பு மருத்துவக் கல்லூரிக்கும், குமார் பேராதனைப் பொறியியல் துறைக்கும் அனுமதி பெற்றார்கள். பல்கலைக்கழகம் செல்வதற்காகக் காத்திருந்த காலத்தில் சாவகச்சேரியில் புகழ்பெற்ற ஆங்கில ஆசிரியரான சிரோன்மணி ஆசிரியரிடம் பிரத்தியேகமாகச் சென்று ஆங்கிலம் படித்தார்கள். இவர்களைப் போன்று பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல மாணவர்களும் அந்த வகுப்புக்கு வந்திருந்தார்கள்.

ஆங்கிலம் கற்பதற்கு மேலாக அங்கு வந்த மாணவர்கள் ஒருவருக்கொருவர் நட்பை ஏற்படுத்திப் பழகி வந்தார்கள்.

ஒரு சில மாணவர்கள் அங்கு ஏற்பட்ட நட்பின் பின்பு பல்கலைக்கழகத்தில் யார் தமது ரூம் மேற் என்பதையும் தெரிவு செய்து கொண்டார்கள். அந்த வகுப்பறை சில காதல் சோடிகளையும் உருவாக்கி விட்டது.

சுதன் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு பல்வைத்தியத் துறைக்கு அனுமதி பெற்ற ரேகாவையும், குமார் கொழும்பு மருத்துவத் துறைக்கு அனுமதி பெற்ற நீராவையும் காதலித்தார்கள்.

சுதன், குமார் இருவரிடம் காணப்பட்ட நட்பு வட்டத்தில் ரேகா, நீராவும் சேர்ந்து கொண்டார்கள். நால்வரும் அடிக்கடி சேர்ந்து சுற்றித் திரிந்தார்கள். சினிமா பார்க்கவும் சென்றார்கள். காலமும் நாட்களாக, வாரங்களாக, மாதங்களாகப் பறக்க இந்த நால்வரும் ஒரு திசையில் பயணித்த இருசோடிக் காதல் பறவைகளாய்ப் பறந்தனர்.

யார் கண்பட்டதோ தெரியவில்லை. ஒருநாள் ரேகாவுக்கும், நீராவுக்கும் இடையில் போர் மூண்டு விட்டது. ரேகாவும், நீராவும் தாம் மருத்துவத் துறை படிக்கப் போக வேண்டும் என்ற எண்ணத்தோடு படித்தவர்கள். ஒரு சில புள்ளிகள் குறையப் பெற்றதால் நீரா பல்வைத்தியத் துறைக்கு மட்டுமே அனுமதி பெற்றிருந்தாள். இதனால் நீரா மனதில் கவலையுடன் தான் இருந்தாள்.

ஒருநாள் ரேகா நகைச்சுவையாக நீராவிடம் " நீ ஆட்களின் பல் மட்டும்தானே கவனிக்கப் போகிறாய்" என்று கேலியாகக் கூறி விட்டாள்.

ஏற்கனவே மனம் உடைந்து போயிருந்த நீராவுக்கு ரேகா கூறியது பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

"நான் யோசிக்காமல் கூறி விட்டேன். என்னை மன்னித்துக் கொள் நீரா" என்று சொல்லி ரேகா எவ்வளவோ மன்றாடியும் நீராவைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

சுதன், குமார் பல கட்டப் பேச்சுவார்த்தை செய்தும் முடியாமல் போகவே ரேகாவும், நீராவும் நிரந்தரமாகப் பேசாமல் விட்டு விட்டார்கள். நீரா மேலும் ஒருபடி மேல் சென்று குமாரையும் சுதனுடனோ அல்லது ரேகாவுடனோ ஒரு நாளும் பேசக்கூடாது என்ற சொல்லி விட்டாள்.

அன்று ஏற்பட்ட பிரிவுக்குப் பின்பு குமாரும் சுதனும் கடந்த முப்பத்தாறு வருடங்களாகப் பேசவேயில்லை. இன்றுதான் மீண்டும் குமாரைச் சந்திப்பதற்காக ரொறன்ரோ நோக்கிப் பிரயாணம் செய்கின்றான் சுதன்.

ஒரு சில மாதங்களுக்கு முன்பு கான்சர் சம்பந்தமான ஆய்விலும், கான்சர் சிகிச்சையிலும் ஈடுபட்டு அமெரிக்காவில் வாழ்ந்து வரும் சுதனின் தொடர்பு இலக்கங்களைத் தற்செயலாகப் பெற்றுக் கொண்ட குமார் சுதனைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு,

“டே சுதன் குமார் பேசுறன். எப்படி இருக்காய்” என்று கேட்க, சுதன் “ யார் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் படித்த குமாரா” என்று கேட்டான்.

“ஆமாம். சுதன். சில தினங்களுக்கு முன்தான் உனது தொலைபேசியை இணையத்தளமொன்றில் இருந்து எடுத்தேன். எப்படி இருக்கிறாய்.” என்று தொடங்கி நீண்ட நேர உரையாடலை சுதனுடன் குமார் செய்தான்.

ஒரு கட்டத்தில் “நீரா எப்படி இருக்கிறா” என்று கேட்டான் சுதன்.

“அவள் நன்றாக இருக்கிறாள். நாங்கள் ஒவ்வொரு செக்கனும் இணைந்தே இருக்கிறோம்” என்றான் குமார்.

உடனே சுதன் “டே குமார் நீ பேசுவது நீராவுக்குத் தெரியுமா?” என்று கேட்டதும் இந்தக் கேள்வியின் அர்த்தம் நன்கு புரிந்தவனாக...................

“உனக்குத் தெரியுமா? உன்னையும் ரேகாவையும் தேடிப் பிடித்து உறவு கொண்டாடுமாறு சொல்லிப் பலவருடங்கள் ஆச்சு. எங்கள் பிரிவுக்கு தான் காரணமாகி விட்டேன் என்று பலதடவை எனக்குக் கூறி கவலைப்பட்டாள்”

“அப்படியா குமார். எனக்குப் பெரிய மகிழ்ச்சியாக இருக்கின்றது. கொஞ்சம் பொறு. ரேகா இதனைக் கேட்டால் மிகவும் சந்தோஷப்படுவாள். நீயும் அவளுடன் பேசு” என்று

சொல்லி விட்டு ரேகாவிடம் தொலைபேசியைக் கொடுக்க குமார் ரேகாவுடனும் சில நிமிடங்கள் பேசினான்.

இப்பொழுது குமாரையும், நீராவையும் நேரில் சென்று பார்ப்பதற்காகவே சுதனும், ரேகாவும் பயணமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

தூக்கத்தில் இருந்து விழித்த ரேகா சுதன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்ததைக் கண்டதும் "என்னப்பா கடுமையாய் யோசிக்கிறியள்" என்று கேட்டாள்.

சுதன் "ஒன்றுமில்லை, கடந்த கால நினைவுகளை நினைச்சுப் பார்த்தன். குமாரோடு எவ்வளவு நெருங்கிப் பழகி .... தேவையில்லாத ஒரு பிரச்சினையால் இவ்வளவு காலம் ஒரு தொடர்பும் இல்லாமல் இருந்திருக்கிறம்..." என்றான்.

"எல்லாம் விதி. நான் எதுவும் யோசிக்காமல் ஏதோ சொல்ல நீரா அதைப் பெரிசாய் எடுக்க ம்ம்...... எங்களிருவரால் உங்கள் இருவரின் நட்பும் முறிந்து விட்டது." என்று கவலையுடன் சொன்னாள் ரேகா.

"சரி நீர் கவலைப்படாதையும். இப்பவாவது ஒரு முடிவு வந்திருப்பதை நினைச்சு மகிழ்ச்சியடைவம்" என்றான் சுதன்.

*********

ரொறன்ரோ பியர்சன் சர்வதேச விமானநிலையத்தில்.............பகல் 12:30 இற்கு விமானம் தரையிறங்கியது.

விமானத்தில் இருந்து இறங்கிப் பொதிகளை எடுத்துக் கொண்டு குடிவரவு அதிகாரிகளிடம் பாஸ்போர்ட் காட்டி அனுமதிகளைப் பெற்று சுங்க இலாகா இடத்தையும் தாண்டி வெளியே வரும்பொழுது பல உறவினர்கள் தத்தமது விருந்தினர்களை வரவேற்கக் காத்திருந்தனர். ஒரு சிலர் கையில் பூச்செண்டுகளை வைத்திருந்தனர். சிலர் விருந்தினர்களின் பெயரை எழுதிய அறிவித்தல் பலகைகளை கைகளில் தாங்கியிருந்தனர். இவர்களுக்குள் தான் குமாரும் நிற்பான் என்ற எண்ணத்தில் சுதனின் கண்கள் நோட்டம் விட்டன.

ஒருவரின் தலையில் ஒரு டியிற்றல் டிஸ்பிலே இருந்தது. அதில் "நண்பன் சுதனே வருக!" என்ற அறிவித்தல் காணப்பட்டது.

"அடேயப்பா. இவர்தான் குமாரா. அந்தக் காலத்து குமாருக்கும் இவனுக்கும் இடையில் ஒரு தொடர்பையும் காணவில்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு ரேகாவுக்கும் கையால் குமாரைக் காட்டினான். அப்போதுதான் இவர்களைக் கவனித்த குமார் இவர்களைப் பார்த்துப் புன்னகை பூத்தவாறு இவர்களை நோக்கி வந்தான்.

அருகில் வந்ததும் குமாரும், சுதனும் ஒருவரையொருவர் கட்டித் தழுவினார்கள். இருவரின் கண்களும் கலங்க ஒருவரையொருவர் கட்டித் தழுவியவாறு ஒரு சில நிமிடங்கள் நின்றதைக் கவனித்த ரேகாவின் கண்களும் கலங்கி விட்டது.

குமார் ரேகாவுக்கும் கைகுலுக்கி அவளை வரவேற்றான்.

சுதன் ஒருவாறு தன்னைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வந்த பின்பு குமாரினை உற்று நோக்கினான். சுதனின் கண்களில் குமார் ஒரு விஞ்ஞான மேதையாகவே காட்சியளித்தான். அதிலென்ன ஆச்சரியம் இருக்கிறது. குமார் ஒரு மின்னணுவியல் பேராசிரியராகவும், ஆய்வாளராகவும் உள்ளவன் தானே. ஆனால் அமெரிக்காவில் எனது பல நண்பர்கள், பேராசிரியர்களாகவும், ஆய்வாளர்களுமாக உள்ளனர். அவர்கள் யாரிலும் இல்லாத ஒரு தோற்றம் குமாரில்.......

ஆனால் அவர்களுக்கும் குமாருக்குமிடையில் ஒரு ஒற்றுமையிருந்தது. பேசும்பொழுது அவன் வாய்மட்டும் பேசியது. அவன் தலைக்குள் பல சிந்தனைகள் ஓடுவதுபோன்று அவன் செய்கைகள் இருக்கும். ஏன் சுதனிலும் இந்தப் போக்கு இருப்பதாக ரேகா அடிக்கடி முறையிடுவதுண்டு.

“கனக்கப் படிக்க படிக்க நாமெல்லாம் இப்படியாய் மாறிவிடுகிறோமா?” என்று தனக்குள் சுதன் சொல்லிக்கொண்டான்.

குமார் கையில் ஒரு ரிமோர்ட் வைத்திருந்தான். இவர்களுடன் பேசிக்கொண்டே ரிமோர்ட்டில் ஒரு பட்டனை அழுத்தினான்.

அவன் தலையில் காணப்பட்ட டிஜிற்றல் டிஸ்பிளே சுருங்கி உருவத்தில் நன்றாகச் சுருங்கிப் பின் தலைப்பகுதியால் இறங்கிக் கழுத்தில் அவன் போட்டிருந்த சங்கிலியில் உருண்டு முன் கழுத்துப் பகுதிக்கு வந்து அழகிய பென்ரனாக உருமாறி அவனது சங்கிலியில் தொங்கியது.

குமார் செய்யும் மந்திர வித்தையை அல்லது விஞ்ஞானச் சாதனையை உற்று நோக்கிக் கொண்டிருந்த சுதன் ரேகாவையும் கையால் சுரண்டிக் காண்பித்தான். அவளும் வியப்புடன் பார்த்தாள்.

குமார் சுதனுக்கும், ரேகாவுக்கும் அருகில் வந்து திரும்பவும் ரிமோர்ட் இனை அழுத்திக் கொள்ள ஒரு மைக்கிரோ போன் முன்னர் டிஜிட்டல் டிஸ்பிளேயாக காட்சியளித்து இப்பொழுது ஒரு பென்ரன் ஆக மாறிக் குமாரின் கழுத்துச் சங்கிலியில் தொங்கிக்கொண்டிருக்கும் அந்த அதிசயப் பொருளுக்குள் இருந்து புறப்பட்ட ஒரு தண்டு போல் வெளிவந்து மரத்திலேறும் பாம்பு போல் வளைந்து குமாரின் வாயடிக்கு வர “நீரா உன் ஆசைப்படி சுதனும், ரேகாவும்

வந்திட்டார்கள் எங்களைப் பார்க்க.... அவர்களுடன் பேசு” என்று மைக்கிரோ போனில் சொன்னான்.

இப்பொழுது அவன் சங்கிலியில் தொங்கிய அதே பொருள் ஒரு ஸ்பீக்கராக உருவெடுக்க அதிலிருந்து “வாருங்கள் சுதன், ரேகா. மிக்க மகிழ்ச்சி. உங்களைப் பார்க்க நெடுநாளாக ஆசைப்பட்டேன்.” என்றது நீராவின் குரல்.

சுதனும், ரேகாவும் குமாரின் இத்தகைய விந்தைச் செயல்களையெல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்தவாறு குமாரைப் பின்தொடர்ந்தார்கள்.

சுதனுக்குத் தலை சுற்றியது.

“அடே குமார் என்னடா செய்யுறாய்” என்று அவன் கையிலிருந்த ரிமோர்ட்டைக் காட்டிக் கேட்டான் சுதன்.

“பயப்படாதே சுதன். படித்த விடயங்களில் சிலவற்றை என் நாளாந்த வாழ்க்கையில் நிஜமாக்கி வைத்திருக்கிறேன். அவ்வளவுதான்” என்றான் குமார்.

“குமார் யு ஆர் கிரேட்” என்று சொல்லி குமாரின் தோளைத் தட்டினான் சுதன்.

வாகனத் தரிப்பிடத்துக்கு வந்ததும் வாகனத்தரிப்பிற்கான கட்டணத்தைக் கட்டி விட்டு திரும்பவும் வித்தை காட்டத் தொடங்கினான். குமார்.

அதே ரிமோர்ட் பட்டனை அழுத்தினான்.........மைக்கிரோபோன் திரும்பவும் வந்தது. "நீரா நாங்கள் காரில் ஏற ரெடி. நாங்கள் பி 2 லெவல் பேமன்ற் மெசின் உள்ள பக்கத்தில் நிற்கிறோம். றிமோர்ட் இனை ரேஸ் பண்ணி அனுப்பி வை" என்றான்.

"என்னடா இவன் நீரா வீட்டில் என்றான். இப்ப அவளையே கூப்பிட்டுக் காரை அனுப்பு என்கிறான்." என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் சுதன்.

ஐந்து நிமிடத்தில் ஒரு ஜீப் வந்து அவர்கள் முன்னே நின்றது. "நீரா தான் ஜீப் ஓடுகிறாளா அல்லது டிரைவர் வைத்து இருக்கும் அளவிற்கு" என்று சொல்லிக் கொண்டு எட்டிப் பார்த்தான்" குமார்.

"என்ன ஆச்சரியம். காருக்குள் எந்தச் சாரதியும் இல்லை. டிரைவர் இல்லாத ஜீப்பா" சுதன் கேட்டான்.

"ஆம். சுதன். இன்னும் ஒரு பரீட்சார்த்த நிலையில்தான் இருக்குது. குறுகிய இடங்களுக்கு மட்டும் சாரதி இல்லாமல் எனது ஜீப் ஓடும். இன்னும் சில காலத்தில் முழுமையாக சாரதி இன்றி ஓடவைக்கலாம்." என்றான் குமார்.

"கடவுளே. நல்ல காலம். சாரதியில்லாத ஜீப்பில் போகவேண்டியிருக்கும். நினைக்கவே பயமாக இருக்கு." என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் சுதன்.

சாமான்களை ஏற்றி விட்டு குமார் சாரதி சீற்றில் ஏற சுதனும் ஏறி முன் சீற்றில் அமர்ந்தான். ரேகா பின்னுக்கு ஏறினாள்.

ஜீப் ஓடத் தொடங்கிச் சில நிமிட நேரத்தில் நீராவின் குரல் ஒலித்தது. " ரேகா நீங்கள் இருவரும் கோழி இறைச்சி, முட்டை எல்லாம் சாப்பிடுவீர்களா? "

சுதனுக்குத் தலை சுற்றியது.

"ரேகா பயப்படாமல் பதில் சொல்லுங்கோ. எங்களுக்கு மதிய உணவு தயார் செய்யத்தான் கேட்கிறா" என்றான் குமார்.

ரேகா தயக்கத்துடன் "ஆம் நீரா சாப்பிடுவோம் மிக்க நன்றி " என்றாள்.

உடனே "யு ஆ வெல்கம்". என்று நீராவின் குரல் வந்தது.

ஒரு சில நிமிடத்தில் மீண்டும் நீராவின் குரல்...

"உங்களுக்குப் பிடித்த பாடலை போடுகிறேன். கேளுங்கள்....." என்று ஒலித்தது.

பாடல் ஒலிக்கத் தொடங்கியது.

குமாருடன் சுதன் பேசிக் கொண்டு வந்தான்.

ரேகா பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள்......

பல பாடல்களைக் கேட்டுக்கொண்டு இருந்து விட்டு " குமார், நீரா எப்படி எல்லாப் பாட்டுக்களையும் எனக்குப் பிடித்த பாடல்களாகத் தெரிவு செய்திருக்கின்றா" என்றாள் ரேகா.

"உங்கள் தெரிவுப் பாடல்கள் எல்லாம் உங்கள் முகநூல் மூலம் அறிந்திருக்கிறோம்" என்றான் குமார்.

"என்ன ஆச்சரியம் குமார். இவ்வளவு தூரம் நீங்களும், நீராவும் கவனிக்கின்றீர்கள். இவ்வளவு காலமும் உங்களிருவரிடம் தொடர்பு இல்லாமல் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டதே என்றுதான் கவலையாக உள்ளது" என்றாள் ரேகா.

"உண்மை ரேகா. அந்தக் கவலை எங்களிருவருக்கும் நிறையக் காலமாய் இருந்தது." என்றான் குமார்.

"எங்களுக்கு முதலே தெரிந்திருந்தால் நீராவிடம் ஓடி வந்திருப்பம்" என்றாள் ரேகா.

குமாரின் வீட்டுக்கு முன்பாக ஜீப்பை நிறுத்தினான் குமார்.

"கொஞ்சம் பொறுங்கள். ஜீப் வாஷிங் செய்யப் போகுது" என்றான்.

"வெயிட் ரு ஒபின்த டோர், ஜீப் வாக்ஷிங் ஒன்" என்று நீராவின் குரல் ஒலித்தது.

ஜீப்பைச் சுற்றி குழாய்கள் சிறிதாக முளைத்தன. தண்ணீர் விசிறியடித்தது.

திரும்பவும் “ வெயிற் ஜீப் றையிங் ஒன்” என்று நீராவின் குரல் ஒலித்தது.

ஜீப்பைச் சுற்றியிருந்த காற்றாடிகள் காயவைத்தன.

திரும்பவும் “வெயிற் ஜீப் பொலிசிங் ஒன்” என்று நீராவின் குரல் ஒலித்தது.

காரைச்சுற்றி பொலிஸிங் நடந்தது.

“அடேயப்பா அமெரிக்கா கனடாவிடம் தோற்று விட்டதே” என்றான் சுதன்.

குமார் சிறிய புன்முறுவலுடன் பாராட்டை அமைதியாக ஏற்றுக் கொண்டான்.

இப்பொழுது “ ரெடி ருகெற் டவுண்” என்றது. ஜீப் கதவுகள் தன்னிச்சையாகத் திறந்தன.

இப்பொழுது குமார் ரிமோர்ட்டை அழுத்த வீட்டுக் கதவடியில் இருந்து ஒரு பாலம் போன்று விரிந்து ஜீப் மட்டும் வந்தது. குமார் அவர்களின் பொதிகளைத் தூக்கி அந்தப் பாலத்தில் வைக்க அவை தன்னிச்சையாக அசைக்கப்பட்டு வீட்டுக் கதவடியில் வந்து நின்றன.

கதவடிக்கு சுதனும், ரேகாவும் குமாரைப் பின் தொடர்ந்து வந்ததும் கதவு திறந்தது.

“வாருங்கள் சுதன், ரேகா. குமாரும் நீராவும் உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.” என்று நீராவின் குரல் ஒலித்தது.

சுதனும், ரேகாவும் வீட்டுக்குள்ளே வந்து சோபாவில் இருந்தார்கள்.

குமாரும் வந்து அவர்களுக்கு எதிராக இருந்து பேசிக்கொண்டிருந்தான்.

குமார் அவர்களுடன் பேசியவாறு றிமோர்ட் இல் பட்டனை அழுத்தினான். ஒரு சில நிமிடங்களில் நீராவின் குரலில் “என்ன குடிக்கிறீர்கள், ஒரேஞ் யூஸ், அப்பிள் யூஸ்” என்று ஒலித்தது.

“அப்பிள் யூஸ் ஓகே  நன்றி நீரா” என்று ரேகா பதிலளித்தாள்.

சிறிது நேரத்தால் ஒரு ரோபோ அப்பிள் யூஸ் கொண்டு வந்து சுதனுக்கும், ரேகாவுக்கும் பரிமாறியது. ஆச்சரியத்துடன் சுதனும், ரேகாவும் ரோபோவைப் பார்த்தார்கள். இப்பொழுது இவனுக்கு 4 வயது. இவன் பெயர் ரோமி என்று குமார் அந்த ரோபோவை அறிமுகம் செய்து வைக்க அந்த ரோபோவும் இவர்களைப் பார்த்து புன்முறுவல் செய்துவிட்டுச் சென்றது.

சுதனும், ரேகாவும் அப்பிள் யூஸ் குடித்துக் கொண்டிருக்கும் பொழுது தொலைக்காட்சியில் ஒரு திரைப்படம் போன்று எழுத்துக்கள் ஓடியது.

“இவன் குமார் தனது றிமோர்ட் இல் திரும்பவும் பட்டன்களை அழுத்தியிருக்கிறான் போல் உள்ளது.” என்று சுதன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

“தயாரிப்பு குமார் அன் நீரா” என்று தொலைக்காட்சியில் வந்ததைக் கண்டதும் “என்னடா குமார் படம் எல்லாம் தயாரிக்கிறீங்கள் போல் உள்ளது” என்று சுதன் கேட்க “அப்படியெல்லாம் இல்லை. ஹோம் மேட் டொக்கியுமென்ரரிதான் பார்த்து விட்டு சொல்லு எப்படியென்று” என்றான் குமார்.

அந்தக் காணொளி குமார், நீரா பற்றியதென்று தெரிந்தது.

குமார், நீராவின் படங்கள், படங்கள் மூலம் சித்தரிக்கப்பட்ட அனிமேஷன்ஸ் எல்லாம் வந்து கொண்டிருந்தன.

சுதன், ரேகாவின் படங்கள் எல்லாம் வந்தன. நால்வரும் நட்புடன் திரிந்த காலம் பற்றியெல்லாம் காட்சிகள் ......................

ரேகாவின் கண்கள் கலங்கின. சுதனும் சிரமப்பட்டு வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

குமார், நீரா திருமணக் காட்சிகளும் வந்தன.

அந்தக் காணொளிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது "நீங்கள் எல்லோரும் சாப்பிட்டு விட்டு பார்க்கலாமே." என்று நீராவின் குரல் வந்தது.

அப்பொழுது குமாரும் "சாப்பாடு ரெடி வாங்கள் சாப்பிட்டு விட்டு தொடர்ந்து நீங்கள் பார்க்கலாம்." என்று அழைத்தான்.

"உங்கள் திருமண வீட்டுக் காட்சிகள் தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நல்ல ரைமிங். கலியாணவீட்டுச் சாப்பாடு என்று நினைத்துச் சாப்பிடுவோம்" என்றான் சுதன்.

எல்லோரும் சென்று சாப்பிட அமர்ந்தார்கள். அந்த ரோபோ மேசைக்கு சாப்பாடு எல்லாம் கொண்டு வந்து வைத்தது. அவர்களுக்கு பிடித்த கறிகள். மிகவும் ருசியாக இருந்தது.

சுதனுக்கும், ரேகாவுக்கும் நீரா எங்கே என்ற கேள்வி மனதில் எழுத்தொடங்கியது. குமார் எதையோ மறைக்கின்றான். அவனே சொல்லும் வரை காத்திருப்போம் என்ற மனநிலையில் போலும் அவர்கள் குமாரிடம் எதுவும் கேட்கவில்லை.

"சாப்பாடு மிகவும் ருசியாக உள்ளது" என்றாள் ரேகா.

அப்பொழுது சமையல்காரனை அழைத்து "உங்கள் பாராட்டு இவருக்குத்தான் சேரணும்" என்று கூறிச் சமையல்காரனை அறிமுகம் செய்து வைத்தான்.

இப்பொழுது நிச்சயமாக நீரா அங்கு இல்லை. அவள் சமைக்கவும் இல்லை என்று தெரிய வந்தது. ஆனாலும் சுதனும், ரேகாவும் எந்த கேள்வியும் கேட்காது சாப்பிட்டு முடித்து விட்டு கை கழுவுவதற்காக எழும்பும் பொழுது சமையலறையில் சென்று கழுவுமாறு சொல்ல சுதனும், ரேகாவும் சமையலறைக்குள் வந்தார்கள். சமையலறை மிகவும் பிரமாண்டமாக இருந்தது. அந்த ரோபோ இவர்கள் கை கழுவியதும் கை துடைக்கத் துணி கொடுத்தது. மிகவும் தொழில்நுட்பமும், அழகும் நிறைந்த ஒரு சமையலறையாக இருந்தது.

அவர்கள் திரும்பவும் சமையலறையில் நின்ற சமையல்காரனுக்கு பாராட்டு தெரிவித்து விட்டு ஹோலில் வந்து சோபாவில் அமர்ந்தார்கள்.

குமாரும் வந்து அவர்களுடன் இருந்து பேசிக்கொண்டு இருந்தான். சிறிது நேரத்தில் தொலைக்காட்சியை ஓன் பண்ணினான் குமார். காணொளி தொடர்ந்தது.

குமாரும், நீராவும் சென்று பார்த்த இடங்கள், அவர்களின் சாதனைகள் என்று எல்லாம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இடைக்கிடை குமாரும் மேலதிக விளக்கங்கள் கொடுத்துக் கொண்டிருந்தான்.

ஒரு கட்டத்தில் நீரா நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் இருக்கும் காட்சி வந்தது. உடனே ரேகாவும், சுதனும் ஒரே நேரத்தில் “நீராவுக்கு என்ன நடந்தது. ஏன் வைத்தியசாலையில் இருந்தவா?” என்று குமாரைப் பார்த்துக் கேட்டார்கள்.

குமார் அழத் தொடங்கினான். சுதன் எழும்பி குமாரைத் தழுவி “ஏன் அழுகிறாய்? நீராவுக்கு என்ன நடந்தது?” என்று அடுக்கடுக்காய் கேள்வி கேட்டான்.

ரேகாவும் “குமார் என்னவென்றாலும் சொல்லுங்கோ?” என்று கூறினாள்.

“நீரா என்னை விட்டுப் போய் மூன்று வருடங்கள் ஆகிவிட்டது. அவளுக்கு கான்சர் வந்து செத்து விட்டாள்” என்று சொல்லி விட்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தான்.

சுதனும், ரேகாவும் எதுவும் பேசமுடியாதவர்களாக குமாரை ஆறுதல்படுத்த முயன்று கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்திற்கு “உங்களுக்கு கஸ்டமாய்த்தான் இருக்கும். தயவுசெய்து மிகுதிக் காணொளியையும் பாருங்கள். இந்தக் காணொளியையும் உங்கள் இருவருக்கும் தான் நானும் நீராவும் காணிக்கை செய்திருக்கின்றோம்.” என்றான் குமார்.

காணொளி தொடர்ந்தது. இப்பொழுது சுதனும், நீராவும் கண்ணீர் மல்கக் காணொளியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நீரா நோயினால் பட்ட இன்னல்களைப் பார்த்து ரேகா விம்மி விம்மி அழுதாள். நீராவின் இறுதிக்கிரியை கூட கொஞ்சம் படமாக்கப்பட்டிருந்தது.

இறுதியில் குமார் சொல்லியவாறு காணொளியின் இறுதியில் "இவ்வுலகில் எங்கோ ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் அருமை நண்பர்கள் சுதனுக்கும், ரேகாவுக்கும் காணிக்கை செய்கின்றோம்" என்ற தகவலும் தொலைக்காட்சியில் வந்தது.

காணொளி முடிந்ததும் சுதன் திரும்பவும் எழும்பிக் குமாரைக் கட்டித் தழுவி தனது துயரத்தை தெரிவித்துக் கொண்டு "நாங்கள் எல்லோரும் எழும்பி ஒரு நிமிடம் நீராவுக்கு அஞ்சலி செலுத்துவோம்" என்று சொல்ல எல்லோரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினார்கள்.

பின்பு எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

சிறிது நேரத்தில் குமார் தனது கவலைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு சுதனையும், ரேகாவையும் பார்த்து பேசத் தொடங்கினான்.

"உங்கள் இருவரையும் தான் உயிரோடு இருக்கும் பொழுது பார்க்க வேண்டும் என்று நீரா ஆசைப்பட்டாள். என்னால்

அவளின் ஆசையைத் தீர்த்து வைக்க முடியவில்லை. நீங்கள் விமான நிலையத்தில் வந்து இறங்கியது முதல் நீங்கள் கண்டவை, கேட்டவையெல்லாம் நானும், நீராவும் சேர்ந்து உருவாக்கிய விஞ்ஞானச் சாதனைகளின் சிறிய ஒரு பகுதி மட்டும்தான். இந்த வீடு முழுவதும் ஏராளமான விஞ்ஞானச் சாதனைகளை காட்சிப்படுத்தியிருக்கிறோம். நீங்கள் பார்க்கும் பொழுது மிகவும் ஆச்சரியப்படுவீர்கள். இந்த வீடு முழுவதும் நீராவின் படங்கள், உரையாடல்கள், அவளின் வயலின் இசை, அவளின் ஆய்வுத்தகவல்கள் என்று நிறைய காட்சிப்படுத்தியிருக்கின்றோம். அவள் நிஜமாகவே இருக்குமாப்போல் நீராவைப் போலவே ஒரு அற்புதமான ரோபோவை உருவாக்கி படுக்கையறையில் வைத்திருக்கின்றேன். இப்பொழுது அவளால் வீட்டின் மேற்பகுதியில் உள்ள எல்லா இடங்களுக்கும் நடக்க முடியும். என்னோடு உரையாட முடியும். எனது உடுப்புக்களையெல்லாம் ஒழுங்கு செய்து நீரா செய்வது போன்று செய்ய முடியும்.

ஆர்ட்டிபிக்ஷல் இன்ரெலியன்ஸ் என்பது மனிதனில் காணப்படும் நுண்ணறிவுகளைக் கொண்ட அமைப்புக்களை வன்பொருட்களையும், மென்பொருட்களையும் கொண்டு உருவாக்கிக் கொள்வது. ரோபோக்கள் எல்லாவற்றின் அடிப்படை ஆர்ட்டிபிக்ஷல் இன்ரெலியன்ஸ் தான். ஆர்ட்டிபிக்ஷல் இன்ரெலியன்ஸ் என்ற விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் நிறைந்த துறையானது கணினிவியல், பொறியியல், உயிரியல், மொழியியல், கணிதம் என்று பலதுறைகளின் சேர்க்கையாக உள்ளது. அதனைத்

தமிழில் செயற்கை நுண்ணறிவு என்ற சொல்வாக்கம் செய்துள்ளார்கள். இதன் மூலம் எக்ஸ்பேர்ட் சிஸ்ரம் எனப்படும் நிபுணர் அமைப்புக்களை உருவாக்கி உன்னைப் போன்ற துறைசார் நிபுணர்களின் அறிவை இவ்வுலகில் நிரந்தரமாக பயனுள்ளதாக்கப்பட முடியும். பிரெயினா போன்று நாளுக்கு நாள் புதிய புதிய செயற்கை நுண்ணறிவு மென்பொருட்கள் உருவாகி வருகின்றன. இவ்வாறான மென்பொருட்கள் மூலம் இலகுவாகப் பல விஞ்ஞானச் சாதனைகளை ஏற்படுத்த முடியும்.

கனடாவில் மட்டுமன்றி உலகத்திலேயே அதிக தொழில்நுட்பம், தன்னியக்கப்படுத்தல் நிறைந்த ஒரு இயந்திர வீடாக எனது வீடு மதிக்கப்படுகிறது. எனது வீட்டைப்பார்ப்பதற்கு உலகெங்கும் இருந்து வருடமொன்றுக்கு நூற்றுக்கு மேற்பட்ட விருந்தினர்கள், ஆய்வாளர்கள் என்று வந்து செல்கின்றார்கள். அவர்கள் கொடுக்கும் நன்கொடை கான்சர் ஆய்வுக்கும், கான்சர் நோயினால் அவதியுறுபவர்களின் சிகிச்சைக்கும் செல்கின்றது. சுதன் நீ கான்சர் நோயாளிகளுக்கு வழங்கும் சிகிச்சை பற்றியும், கான்சர் பற்றிய ஆய்வுகள் பற்றியும் அறிந்து கொண்டேன். உனது ஆய்வுத் தேவைகளுக்கும் நான் நன்கொடை தந்து உனது ஆய்வுப்பணியை ஊக்கப்படுத்த விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல நவீன ஆட்டிபிக்ஷல் என்ஜினியரிங் மென்பொருட்கள் மூலம் கான்சர் நோய் பற்றி உனது அறிவை னொலேஜ் பேக்ஷ் ஆக்கி இந்த உலகம் முழுக்கப் பயன்படுமாறு செய்ய விரும்புகின்றேன். இத்தகைய மென்பொருட்கள் மூலமே இந்த வீடு பூராவும் பல கணினிச் சாதனைகளை

உருவாக்கியுள்ளேன். இந்த அபூர்வ வீட்டில் நான் என்றென்றும் அவளோடு வாழ்கின்றேன்" என்று குமார் ஒரு சொற்பொழிவு போன்று செய்து முடித்ததும் சுதனும், ரேகாவும் எழுந்து குமாரைப் பாராட்டினார்கள்.

"வார்த்தைகள் இல்லை. யு ஆர் ரியலி கிறேற். இன்று முதல் நாங்கள் சேர்ந்து பணியாற்றுவோம்" என்று சொல்லிக்கொண்டு மிகவும் ஆர்வத்துடன் அந்த அபூர்வ வீட்டைச் சுற்றிப் பார்க்க குமாரினைப் பின்தொடர்ந்தார்கள். குமாரின் விளக்கங்களுக்கிடையில் நீராவின் குரலும் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

முன்பதிப்பு - நன்றி பதிவுகள்.கொம், கனடா உதயன் பத்திரிகை

(யாவும் கற்பனை)

# குறிப்புக்கள்

# நூலாசிரியரின் முந்திய படைப்புக்கள்

கவிச்சாரல் (புதுக்கவிதைத் தொகுதி)

சாயி அமுதம் ( மரபுக்கவிதைத் தொகுதி)

பொதிகைப் புதுமலர்கள் (மரபுக்கவிதைத் தொகுதி (கவிஞர் எண்மருடன் இணைந்து எழுதியது)

நினைவாற்றல் (அறிவியல் நூல்)

வெகுளாமை (அறிவியல் நூல்)

காலத்துடன் வளரும் கணினிகள் (அறிவியல் நூல்)

அன்புடைமை (அறிவியல் நூல்)

இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதையல்கள் - (இலக்கிய நூல்)

இன்னும் இருக்கிறது இனிய வாழ்க்கை — நாவல்

Non-Profit Know How



Akani Suresh
akanisuresh@gmail.com

9 780986 901683